# 11 ஆம் வகுப்பு வணிகவியல் முக்கிய வினாவிடை

**1. வணிகத்தை வரையறு.** பொருட்களின் பரிமாற்றத்தின் பொழுது ஏற்படும் ஆள்சார்தடை இடத்தடை காலத்தடை போன்றவற்றை அகற்றும் நடைமுறைச்செயல்களில் ஈடுபட்டு மேற்கொள்ளும் எல்லா கூட்டுச்செயல்களை தான் வணிகம்என்பர். **– ஜே.ஸ்டீபன்சன்**

**2. பண்டமாற்று முறை:** ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருளை பெறுவது பண்டமாற்று முறை எனப்படும்.

**3. வியாபாரத்தின் துணைப்பணிகளை பட்டியலிடுக.** வியாபாரம், பண்டகக்காப்பு, போக்குவரத்து, வங்கி, காப்பீடு, விளம்பரமும் விற்பாண்மையும், தகவல் தொடர்பு

**4. நிதிசார் தடை:** உற்பத்தியாளர் நுகர்வோருக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்து தருவதற்கு போதுமான நிதி இல்லையென்றால்அது நிதிசார் தடை எனப்படும்.

**5. ஈ வணிகம்:** ஈ வணிகம் என்பது மின் அணு வணிகம்ஆகும். இணையம்மூலம்நுகர்வோருடன் நேரடி தொட்பு கொள்வதாகும்.

**6. உள்நாட்டு வியாபாரம்**: ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் உள்நாட்டு வணிகம் எனப்படும்.

**7. இடைநிலையர்:** உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் பொருட்களின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் இடைநிலையர்கள்ஆவர்.

**8. தரகர்:** வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையில்பேரம் பேசி வியாபாரத்தை முடிப்பவர் தரகர் ஆவார். தரகருக்கு வழங்கப்படும் கழிவு தரகு எனப்படும்.

**9. கழிவு முகவர்:** நுகர்வோருக்கும் பொருளின் உரிமையாளருக்கும் இடையே இடைநிலையராக செயல்பட்டு கழிவு பெறும்நபர் கழிவு முகவர் ஆவார்.

**10. துறைவாரி பண்டகசாலை**: நகரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் மிகப் பெரிய சில்லறை வியாபார அமைப்பு. ஒரே கட்டிடத்தில் பல துறைகளுடன்செயல்படும்.

**11. துறைவாரி பண்டகசாலைக்கு எ.கா.:** பான்மார்ச் - **பிரான்ஸ்**, ஸ்பென்ஸர்ஸ் - **சென்னை**

**12. மடங்கு கடை**: ஒரே நிர்வாகத்தின் கீழ் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி செயல்படக் கூடிய அமைப்பு மடங்கு கடை எனப்படும்.

**13. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை**: நுகர்வோர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்காக பொருட்களை அல்லது சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சில்லறை வியாபார அமைப்பு நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை ஆகும்.

**14. அஞ்சல்வழி வணிகம்**: அஞ்சல் மூலமாக பொதுமக்களிடமிருந்து பொருட்களுக்கான ஆணைகளைப் பெற்று வியாபாரம் செய்தல் அஞ்சல்வழி வணிகம் எனப்படும்.

**15. மதிப்பு செலுத்தத்தக்க அஞ்சல்**: சரக்குகளை முறையாகக்கட்டுமம் செய்து பதிவுப் பார்சல் அஞ்சல்மூலமாகவோ அல்லது பதிவுப் புத்தக அஞ்சல் மூலமாகவோ வாடிக்கையாளருக்கு அனுப்பும் முறைக்கு மதிப்பு செலுத்தத்தக்க அஞ்சல்எனப்படும்.

**16. தொலைத்தொடர்பு வணிகம்**: இணையத்துடன் சேர்ந்த கணினிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் விளம்பரம் செய்யப்படும் பொருட்களை வாங்குவதே தொலைத் தொடர்பு வணிகம் எனப்படும்.

**17. அயல்நாட்டு வணிகம்**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும்வணிகமே பன்னாட்டு வணிகம்அல்லது அயல்நாட்டு வணிகம்எனப்படும்.

**18. மறு ஏற்றுமதி வணிகம்**: ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்தால்அது மறு ஏற்றுமதி வணிகம் எனப்படும்.

**19. உலகமயமாக்கல்**: சரக்குகள், சேவைகள், தொழில்நுட்பம், நிதி மற்றும் பணியாளர்கள் ஆகியவற்றின் சர்வதேச சந்தைகளை ஒருங்கிணைப்பு செய்தலையே உலகமயமாக்கல்என்கிறோம்.

**20. பன்னாட்டு நிறுமம்**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் தொழில் செய்கின்ற நிறுமம் பன்னாட்டு நிறுமம் எனப்படும். எ.கா ஜப்பான் - டொயோட்டா அமெரிக்கா - கோ கோ கோலா

**21. போக்குவரத்து - இலக்கணம்**: ஒரு இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல போக்குவரத்து அந்தந்த பகுதிகளில்தனது சேவையை ஆற்றுகிறது. - **கே.கே.செக்சேனா**

**22. போக்குவரத்தின் பொருளாதார பயன்பாடுகள்**: உழைப்பும் முதலும் இடம் விட்டு இடம் செல்ல உதவுகிறது. பொருட்களுக்கான சந்தையை விரிவாக்குகிறது.

**23. பொதுச்சரக்கேற்றி - இலக்கணம்**: அனைத்து நபர்களின் சரக்குகளை எவ்வித வேறுபாடும் காட்டாமல் வாடகைக்காக சுமந்து செல்லும்நபர் அல்லது வாகனம்பொதுச்சரக்கேற்றி ஆகும்.

**24. கொள்கலனாக்கம் - இலக்கணம்**: அண்மைக் காலத்தில் பெரிய அளவில் கொள்கலன் செய்யப்பட்டு அவற்றில் அதிக அளவில் பொருட்களை கட்டுமம் செய்து அனுப்பும் நவீன கால வளர்ச்சியே கொள்கலனாக்கம் ஆகும்.

**25. பண்டகக்காப்பு**: பண்டகக்காப்பு என்பது சந்தைப் பணிகளுள்ஒன்று. பண்டம் என்றால் பொருள்காப்பகம் என்றால் பொருட்களைப் பாதுகாக்கும் ஒரு இடம்.

**26. நாட்டுப்புற வங்கியர்**: தனித்து இயங்கும்உள்நாட்டு வங்கியர் நாட்டுப்புற வங்கியர் ஆவார். இவர் இந்திய மைய வங்கியின் கட்டுப்பாட்டில் வராதவர்.

**27. வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்படும் வைப்புகள்**: சேமிப்பு வைப்பு, நிலை வைப்பு, தொடர் வைப்பு, நடப்பு கணக்கு வைப்பு.

**28. காசோலை - இலக்கணம்**: காசோலை என்பது குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்பட்ட, கேட்கும் போது தரப்பட வேண்டிய ஒரு மாற்றுமுறை உண்டியல்ஆகும்.

**29. இணைய வங்கி**: இணையம்மூலமாக நடத்தப்படும் வங்கி நடவடிக்கைகளை இணைய வங்கி என்கிறோம். இதனை மின்னனு வங்கி என்றும் அழைக்கலாம்.

**30. பின் எழுதுதல்**: மாற்றுச்சீட்டின் பின்புறத்தில் பணம் பெறுபவரின் பெயரை எழுதுவதையே பின் எழுதுதல், மேலெழுதுதல்அல்லது புறக்குறிப்பு என்று பெயர்.

**31. கடன்அட்டை:** வங்கிகளால் அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாதத்தில் குறிப்பட்ட அளவு கடன் கொள்முதல்செய்வதற்காக வழங்கப்படும் அட்டை கடன்அட்டை அகும்.

**32. காப்பீடு:** காப்பீடு தருநர் காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்வதாக ஒப்புதல் அளிக்கும் ஓர் ஒப்பந்தம் காப்பீடு ஆகும்.

**33. காப்பீட்டுறுதி - இலக்கணம்**: இடர் ஏற்படுவது உறுதியாகவும், அந்த இடர் எப்பொழுது ஏற்படும் என்பது உறுதியற்றதாகவும் உள்ள ஒன்றிற்கு காப்பீடு செய்யும் ஒப்பந்தம் காப்பீட்டுறுதியாகும்.

**34. விளம்பரம் வரைவிலக்கணம்**: அச்சு மூலமாகவோ அல்லது படங்களை வெளியிடுவதன் மூலமாகவோ எழுத்து மூலம் தகவல்களைப்பரப்பும் விற்பாண்மையே விளம்பரம் ஆகும். - **ஹால்**

**35. விளம்பரத்தின் பிரிவுகள்**: அக விளம்பரம், புறமனை விளம்பரம், நேரடி விளம்பரம், மேம்படுத்தும் விளம்பரம், இணையதள விளம்பரம்

**36. செய்தித்தாள் விளம்பரத்தின் குறைபாடுகள்**: செய்தித்தாள் விளம்பரம் மிகவும் குறுகிய வாழ்வை உடையது. மேலோட்டமாக செய்திகளை வாசிப்பவர்கள் விளம்பரங்களை வாசிப்பது கிடையாது.

**37. புறமனை விளம்பரச் சாதனம்**: மக்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் நேரங்களில் அவர்களுக்கு விளம்பரத் தகவல்தரும்சாதனம்புறமனை விளம்பரச் சாதனம் ஆகும். எ.கா சுவரொட்டி விளம்பரம் வாகன விளம்பரம் வான்வெளி விளம்பரம்.

**38. நேரடி விளம்பரம்:** வாடிக்கையாளர்களின் வீட்டிற்கே நேரடியாக விளம்பரத் தகவல்களை அனுப்பி வைப்பது நேரடி விளம்பரம் எனப்படும்.

**39. இணைய தள விளம்பரம்:** இணையத்தின்மூலமாக நுகர்வோர்களுக்கு விளம்பரம் செய்வது இணைய தள விளம்பரம் ஆகும். 1994 ஆம்ஆண்டு அக்டோபர் மாதத்தில் முதல்இணைய தள விளம்பரம் வெளியானது.

**39 அ) சாளரக்காட்சி**: அழகாக அலங்கரிக்கப்பட்ட சாளரங்களில் பண்டங்களை வைத்து விளம்பரம் செய்யப்படுவதைச் சாளரக்காட்சி என்கிறோம். கடைகளின் முன்புறம் அல்லது புகை வண்டி நிலையம், திரை அரங்கம் போன்ற மக்கள் கூடும் முக்கிய மையங்களில் சாளரக்காட்சி அமைக்கப்பட்டு விளம்பரத் தகவல் தரப்படுகிறது.

**40. விற்பாண்மை – வரைவிலக்கணம்**: விற்பாண்மை என்பது நுகர்வோர் பொருட்களை வாங்கத் தூண்டி உற்பத்தியாளருக்கு இலாபத்தையும், நுகர்வோர்களுக்கு பயனையும்அளித்தலாகும்.

**41. நுகர்வோர்**: 1986 இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 2(I) (டி)-ன்படி ”எவரொருவர் சொந்தப் பயனுக்காக மறுபயன் அளித்து எந்த பொருட்களையும் வாங்குகிறாரோ அல்லது எந்த சேவையையும் ஏற்கிறாரோ அவரே நுகர்வோர் ஆவார்”.

**42. திரு.ஜான் எப். கென்னடியின் கூற்றுப் படி நுகர்வோரின் உரிமைகள்**: பாதுகாப்பு உரிமை, அறிந்து கொள்ளும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கருத்துக்கூறும் உரிமை.

**43. தமிழ்நாட்டில் நுகர்வோர் இயக்கம்**: - தமிழக அரசு 1988 ஆம்ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றி மாநிலக் குழுமம், மாவட்ட மன்றம் ஏற்படுத்தி நுகர்வோர் இயக்கத்தை செயல்படுத்துகிறது.

**44. நுகர்வோர் இயக்கம் என்ற சொல்லை விளக்குக:** நுகர்வோரைச் சுரண்டுதல் மற்றும் பல இன்னல்களிலிருந்து நுகர்வோரை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட இயக்கம் நுகர்வோர் இயக்கம் ஆகும். **ரால்ப் நேடர்** நுகர்வோர் இயக்கத்தின் தந்தை ஆவார்.

**45. பண்ட மாற்று முறையில்உள்ள இடையூறுகள்**: இதில் ஈடுபடுவோரின் தேவைகள் ஒத்துப்போகாமல் இருத்தல், பொருள்மதிப்பீட்டின் காரணமாக பண்டமாற்று முறையில் தடைகள் ஏற்படுகிறது, ஊற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நேரடித் தொடர்பு இல்லாமல்இருத்தல், கூடுதல் பொருள் இருப்பு வைக்க முடியாத போது பண்டமாற்று முறையில் தடை ஏற்படுகிறது.

**46. தொழிற்சாலையின் பிரிவுகள்**: **பிரித்தெடுக்கும் தொழிற்சாலை**: பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் பொருளை தூய்மை செய்யும் தொழிற்சாலை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை எனப்படும். **மரபுத் தொழிற்சாலை:** நுகர்வுக்காக தாவரங்களையும், விலங்குகளையும் வளர்ப்பது மரபுத் தொழிற்சாலை எனப்படும், **கட்டுமானத் தொழிற்சாலை:** கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள், அணைகள் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுமானத் தொழிற்சாலை எனப்படும். **தயாரிப்புத் தொழிற்சாலை:** மூலப் பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றக் கூடிய தொழிற்சாலை தயாரிப்பு தொழிற்சாலை எனப்படும்.

**47. மின்னனு வணிகத்தின் குறைபாடுகள்**: இணையத்தின் மூலம் பல மோசடிகள் நடப்பதால் நுகர்வோர் இதில் ஈடுபட தயங்குகின்றனர். இதற்கான செலவு அதிகம். இதன்மூலம்பெறப்படும் பொருளின் அளவு, தரத்தை ஆய்வு செய்ய முடிவதில்லை. விரைவில் கெட்டுவிடும் பொருட்கள் மற்றும் உடைந்து விடும் பொருட்களை ஆய்வு செய்ய முடியாது.

**48. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள்**: 1. அனைத்து வகையான பொருட்களை கிடைக்கச் செய்கிறது. 2. அதிக அளவு பொருள்உறபத்திக்கு உதவுகிறது. 3. வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது. 4. தகவல்தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதி வளர்ச்சியடைகிறது. 5. விலைவாசியை நிலையாக இருப்பதற்கு உதவுகிறது.
**பன்னாட்டு வணிகத்தின் தீமைகள்:** 1. ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைச்சிக்கல்கள் அதிகம். 2. உள்நாட்டுத் தொழில் பாதிக்கப்படுகிறது. 3. தீமை தரும்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. 4. உள்நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. 5. அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுவதால் இயற்கை வளங்கள்தீர்ந்து விடுகிறது.

**49. உலகமயமாக்கலின் நன்மைகள்**: 1. தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக உலகமே சிறிய கிராமம் போல் மாறிவிட்டது.2. போட்டியின் காரணமாக நல்ல தரமான பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகிறது. 3. போட்டியின் காரணமாக தரமான பொருட்கள் விலை குறைவாக கிடைக்கிறது. 4. மேலாண்மைத்திறனை அதிகரிக்கிறது. 5. புதிய பொருட்கள் உற்பத்திக்கு முக்கியத்துவம்அளிக்கிறது. **உலகமயமாக்கலின் தீமைகள்:** 1. அந்நியச் செலாவணி செலுத்துதலில்பிரச்சனை ஏற்படுகிறது. 2. காலாவதியான பொருட்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் விற்கப்படுகிறது. 3. உள்நாட்டுத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் பாதிக்கிறது. 4. உள்நாட்டு நாணய மதிப்பில் அடிக்கடி ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது.

**50. போக்குவரத்தின் பொருளாதார பயன்பாடுகள்**: உற்பத்தி திறனை அதிகரிக்கிறது. பலவிதமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் அதன் அளவை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்கப்படுவதால் பொருட்களுக்கான சந்தை வரிவடைகிறது.

**51. பண்டகக்காப்பகத்தின் பணிகள்**: பல விதமான இடர்பாடுகளிலிருந்து பொருட்களைப் பாதுகாத்தல். பொருட்களுக்கான விலைகளை நிலையாக இருப்பதற்கு உதவுகிறது. எதிர்காலத்துக்குத் தேவையான பொருட்களை பாதுகாத்து வைக்கிறது.

**52. பல்வேறு வகையான பண்டகக்காப்பு ஆவணங்கள்:** 1.**பண்டக சான்றானை:** பொருளின் உரிமையை மாற்றித் தருவதற்காக பண்டகக் காப்பாளரால் பொருளின் உரிமையாளருக்கு வழங்கப்படுகிறது. 2.**கப்பல் சான்றானை:** கப்பலில் சரக்கை ஏற்றுவதற்காக துறைமுக அதிகாரிகளால் வழங்கப்படும், உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமாகும். **3.கப்பல் இரசீது:** துறைமுக அதிகாரிகளால் சரக்கை பெற்றுக் கொண்டதற்காக பொருளின் உரிமையாளருக்கு வழங்கப்படும் ஆவணம்.

**53. காசோலையின்தன்மைகள்**: காசோலை ஒரு எழுதப்பட்ட ஆவணம்பென்சிலால் எழுதக்கூடாது. குறிப்பட்ட வங்கியரின் மேல் எழுதப்பட்டிருக்க வேண்டும். இதில் எழுதுவோரின்கையெழுத்து ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். காசோலையில்குறிப்பிட்டுள்ள தொகை கேட்கும் போது தரப்பட வேண்டும். நிபந்தனையற்ற உத்தரவைக்கொண்டதாக இருக்க வேண்டும்.

**54. வணிக வங்கியின் துணைப்பணிகள்**: **முகமைப்பணிகள்:**

1. வாடிக்கையாளர்சார்பாக காசோலை, உண்டியல்மற்றும் வட்டி வசூலித்தல்.
2. வாடிக்கையாளர்களின் நிலை ஆணைகளை நிறைவேற்றுதல்.
3. வாடிக்கையாளர்களிடமிருந்து பிணையங்களை வாங்குதல்மற்றும் விற்றல்.
4. வாடிக்கையாளரின் சார்பாக நிதி மாற்றம் செய்தல்.

❖ **பயன்பாட்டுப் பணிகள்:**

1. ஆவணங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களை பாதுகாத்தல்.
2. மூலதன வெளியீட்டில் பொறுப்புறுதி ஏற்றல்
3. தானியங்கி பணம்வழங்கும்இயந்திர சேவை
4. கடன்அட்டை சேவை வழங்குதல்
5. வாடிக்கையாளர்களுக்கு பயணிகள்காசோலை வழங்குதல்.

**55. காப்பீட்டை தனியார்மயமாக்கப்படுவதினால் ஏற்படும் நன்மைகள்**:

❖ நிறுவனங்கள்அதிகரிப்பதால் வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது.
❖ புதிய திட்ட ஆவணங்கள்அறிமுகப்படுத்தப்படும்.
❖ மேலாண்மைத்திறனை அதிகரித்து காப்பீடு பெறுநருக்கு சிறந்த சேவையை அளிக்கிறது.
❖ போட்டியின் காரணமாக நுகர்வோர்களுக்கு நிறைய சலுகைகள்வழங்குகின்றனர்.
❖ அதிகமான நிதி திரட்டவும் காப்பீட்டுச் சந்தையை விரிவாக்கம் செய்யவும்முடிகிறது.

**56. விளம்பரத்தின் குறைபாடுகள்**:

❖ மக்களின் பொருளாதாரத்தை சுரண்டுகிறது
❖ மிகைப்படுத்தப்பட்ட விளம்பரத்தால் மக்கள் ஏமாற்படுகிறார்கள்.
❖ மக்களின் உடல்நிலையைக்கெடுக்கும்பண்டங்களையும்வாங்கத் தூண்டுகிறது.

**57. நுகர்வோர் சார்ந்த சட்டங்கள்**:

❖ 1950 - மருந்துகள்கட்டுப்பாட்டு சட்டம்
❖ 1954 - உணவுக்கலப்பட தடுப்புச் சட்டம்
❖ 1955 - அத்தியாவசிய பொருள்சட்டம்
❖ 1958 - எடையளவு தரச் சட்டம்
❖ 1972 - வாடகைக்கொள்முதல்சட்டம்

**58. வர்த்தக நடவடிக்கைகளை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்**

அ. தொழிற்சாலை ஆ. வணிகம்

**அ. தொழிற்சாலை** தொழிற்சாலை என்பது மூலப்பொருட்களையும், முடிவுற்ற பொருட்களையும் உற்பத்தி செவதாகும். தொழிற்சாலை என்ற சொல்லானது வர்த்தகத் தொடர்பான நடைமுறைக் பணிகளையும், பொருட்களைத் தயாரிப்பதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதேயாகும். தொழிற்சாலைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம் 1. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை. 2. மரபுத் தொழிற்சாலை 3. கட்டுமானத் தொழிற்சாலை 4. தயாரிப்பு தொழிற்சாலை

**ஆ. வணிகம்** உற்பத்தி பொருட்களை அல்லது சேவைகளை தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு பரிமாற்றம் செயும் பணியில் அமையும் நடவடிக்கைகள் அனைத்தையுமே வணிகம் என்ற சொல்லின் உள்ளடக்கலாம். மேற்கண்டபரிமாற்றத்தில் பல தடைகள் குறுக்கிடுகின்றன. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே தங்கு தடையற்ற வணிக பரிமாற்றம் நிகவதே வணிகத்தின் குறிக்கோளாகும். 1.வியாபாரம், 2,போக்குவரத்து, 3. நிதி, 4.பண்டகம், 5.காப்பீடு, 6.விளம்பரம்

**57. மடங்குக் கடையின் சிறப்புக் கூறுகள்** 1. **மைய மேலாண்மையும், கட்டுப்பாடும்** மடங்குக் கடைகளின் கிளைகள் சிலவாகவோ அல்லது பலவாகவோ இருந்தாலும் அவை ஒரே மைய நிர்வாகத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் இயங்குகின்றன. பல்வகைக் கிளைகளையும் தலைமையகமே கட்டுப்படுத்தி நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு கிளையும் கிளை மேலாளரால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கிளைகளை மேலாளர்கள் சுயமாக முடிவெடுக்காமல், தலைமையகம் விடுக்கும் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுவார்கள்.
**2. ஒன்று அல்லது ஒரு சில பண்டங்களில் சிறப்புறுதல்**: இன்றியமையாப் பொருள்களில் அல்லது அன்றாட வாடிநவில் தேவைப்படும் நீண்டகாலம் உழைக்கத்தக்க பொருள்களின் விற்பனையில் மடங்குக் கடைகள் ஈடுபடுகின்றன. மடங்குக்கடை ஒரே வகையான பொருட்களை அல்லது ஒரு சில வகையான பொருட்களை மட்டும் விற்பனை செயும் சிறப்பு அங்காடியாகத் திகநகிறது. மடங்குக் கடைகள் பல்வகை நுகர்பொருள் விற்பனையில் ஈடுபடுவதில்லை. எடுத்துக்காட்டாக, ”பாட்டா ஷீ கம்பெனி” காலணிகளையும், உஷா நிறுமம் இயந்திரங்களையும், ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனம் புத்தகங்களையும் விற்பனை செய்கின்றன.
**3. தரமிக்க பொருட்கள்**: இக்கடையில் பொருட்களின் தரம், விலை, போன்றவை எல்லாக் கிளைகளிலும் ஒரே மாதிரியாக விற்பனை நிர்ணயம் செயப்படுகிறது. அதனால் இக்கடைகளில் உள்ள பொருட்கள் ஒரே தன்மையுடையவையாக உள்ளன. **4.மையக்கொள்முதல்:** விற்பனைப் பரவலாக்கம் அனைத்துக் கிளைகளுக்கும் தேவையான பொருட்களை அதன் தலைமையகமே மையக் கொள்முதல் செய்கிறது. அவற்றின் கிளைகள் உள்ளூரில் சரக்கு வாங்க அனுமதிக்கப்படுவதில்லை. கொள்முதல் செய்த சரக்குகளை பல்வேறு கிளைகளுக்குத் தேவைப்படும் அளவில் விற்பனைக்காக அனுப்பி வைக்கிறது. எனவே கிளைகளின் மூலம் பொருட்கள் விற்பனை பரவலாக்கப்படுகிறது. **5. ரொக்க விற்பனை**: அனைத்துச் சரக்குகளும் ரொக்க விற்பனை அடிப்படையில் விற்கப்படுகின்றன. வாடிக்கையாளருக்குக் கடன் விற்பனை செய்வது கிடையாது. ரொக்கம் செலுத்திப் பெற்றுச் செல்க எனும் கோட்பாடு பின்பற்றப்படுகிறது. **6. விளம்பரத் தன்மை**: சாளரக் காட்சியும் வேறு வகையான விளம்பரங்களும் பல்வேறு கிளைகளிலுள்ள ஒரே வகையான பொருள்களுக்கு ஒரே மாதிரி விளம்பரம் செயப்படுவதால் நுகர்வோர் இக்கடைகளை எளிதில் அடையாளம் காண முடிகிறது.
**7. கிளைகளுக்கிடையே சரக்கு மாற்றம்**: ஒரே கிளையில் தேவைக்கு அதிகமாக இருக்கும் பொருட்கள் இன்னொரு அதிகத் தேவையுள்ள கிளைக்கு எளிதாக மாற்றம் செவதோடு அதன் விலையும், தரமும் சீரானதாக இருப்பதற்கு இவ்வகைக் கடைகள் உதவி புரிகின்றன

**58. மறு ஏற்றுமதி வணிகத்தின் சிறப்புத் தன்மைகள்:** 1. இவ்வகை சரக்குகளின் மீது இறக்குமதி வரி சுமத்தப்படுவதில்லை. 2. இவ்வகை சரக்குகள் மறு ஏற்றுமதிக்காக தயார் செய்யப்பட்டு மறு கட்டுமானம் செய்யப்படுகின்றன. 3. இவ்வகை சரக்குகள் மறு ஏற்றுமதி செய்யப்படும் வரை பிணைய பண்டகசாலையில் வைக்கப்படுகின்றன

**59. பண்டகசாலையிடுதலின் பணிகள்: 1. பொருட்களை பாதுகாத்தல்:** சூரிய வெளிச்சம், தூசி, மழை போன்றவற்றிலிருந்து பொருட்களைப் பாதுகாப்பதற்காக தகுதியான அலமாரி, கொள்கலன், சாக்குப்பைகள் இவைகளில் சேமிப்பதன் மூலம் அவை கெடாமல் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு மனிதர்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்து பொருட்களை பாதுகாக்கிறது. தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதால், பொருட்கள் திருட்டுப்போவது தடுக்கப்படுகிறது. தீ விபத்திலிருந்து பொருட்களை காப்பாற்ற தீ தடுப்பு உபகரணங்கள் உடனடி நிலையில் தயாராக வைக்கப்படுகின்றன.
**2. விலைகளை நிலைப்படுத்துதல்:** தேவைப்படும்பொழுது பொருட்களின் சீரான வழங்கல்களைபண்டக காப்பிடங்கள் உறுதிசெகிறது. இவ்வாறாக விலைகளை கட்டுப்படுத்துவதற்கு இது உதவுகிறது. இப்பணி இல்லையெனில் கடுமையான விலை ஏற்றத்தாழ்வுகளினால், உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் பாதிக்கப்படுவதுடன், சீரான பொருள் வழங்கல் இல்லாமல் போவிடும். சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத்தாழ்வுகளை கட்டுப்படுத்தி சமன் செய்யும் ஒரு கருவியாக செயல்படுவதுடன், ஆண்டு முழுவதும் ஏறத்தாழ ஒரே விலையில் பொருட்கள் கிடைக்குமாறு செய்கிறது. **3. பொருட்களை வைப்பிடுதல்:** உற்பத்தியாகும் காலமும் அவற்றின் நுகர்வுகாலமும் வேறுபடுகின்றன. மேலும், உற்பத்தி செயப்பட்ட பொருட்களின் அளவும் வேறுபடுகின்றன. இவ்வேறுபாடு காரணமாக ஏற்படும் மிகுதியான பொருட்கள் எங்கு, எப்போது தேவையோ, அங்கு அப்போது வழங்கப்படுவதற்காக, பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. **4. தேவையையும், வழங்களையும் சமன்படுத்துதல்:** சந்தையில் தேவைப்படாத பொருட்கள் சந்தையிலிருந்து திரும்பப் பெறப்பட்டு, சந்தையில் எப்போது தேவைப்படுகிறதோ, அப்போது வழங்குவதற்காக பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. பருவ காலங்கள் அற்ற காலங்களிலும் நுகர்வோர் தொடர்ந்து பொருட்களை பெற உதவுகிறது. பஞ்சம் மற்றும் பற்றாக்குறை காலங்களில் ஏற்படும் அதிக தேவையை சந்திப்பதற்காக அரசு, உணவு தானியங்களை சிறந்த முறையில் பண்டகசாலையில் சேமித்து வைக்கிறது. **5. வியாபார நிதி பெற வகை செய்தல்:** பண்டக சாலையில் வைக்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில், அப்பொருட்களை வைத்திருப்பவர் பண்டகசாலை வழங்கிய ரசீதின் அடிப்படையில் வங்கிகளிலிருந்தும், பிற நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற உதவுகிறது. **6. விற்பனைக்கான முன்னேற்பாடு** : பொருட்களை சந்தையிடுவதற்கு ஏற்ப நவீனகால பண்டகசாலைகள் பொருட்களை வகைப்படுத்துதல், கட்டுமானம் செய்தல், சின்னமிடுதல் ஆகிய பணிகளை செகின்றன. எனவே பண்டகசாலைகள் பொருட்கள் சந்தையில் இடுவதற்கு தகுதியானவையாக செய்யும் பணியை பண்டகசாலைகள் மேற்கொள்கின்றன. **7. வாங்குவோருக்கு வழங்குதல்** : விற்கப்பட்ட பொருட்கள் வாங்குவோரின் இடத்திற்கே கொண்டு செல்லப்படத் தேவையில்லை. விற்பனையாளர் வாங்குபவரின் பெயரையும், இடத்தையும் குறிப்பிட்டு வழங்கல் ஆணையை பண்டகசாலை பொறுப்பாளருக்கு கொடுத்தாலே போதுமானது. **8. சந்தை வரம்பை விரிவாக்குதல்:** சரக்குகளை பல்வேறு சந்தைகளில் விற்பதற்கு, உற்பத்தியாளர் பண்டகசாலைகளையும் தேவைப்படும் இடங்களில் வாடகை பண்டகசாலைகளையும் பயன்படுத்துகிறார். இவ்வாறு, பண்டகசாலையிடுதல் சந்தை விரிவாக்கத்திற்கு உதவிபுரிகிறது. **9. உற்பத்தியில் கவனம்** : பொருட்களை காப்பிடுதல் பிரச்னையிலிருந்து உற்பத்தியாளர் விடுதலை பெறுகிறார். அவர் தனக்கென்று சொந்தமான காப்பிடம் வைத்துக்கொள்ளத் தேவையில்லை.

பண்டகசாலை பொறுப்பாளர்கள் எல்லாவிதமான சிறப்பான சேவைகளையும் தருகிறார்கள். எனவே, உற்பத்தியாளர்கள் உற்பத்தியில் மட்டுமே கவனம் செலுத்த வகை செய்கிறது. **10. பொருட்களை தகுதியாக்குதல் :** பாலாடைக்கட்டி, புகையிலை, மரம் போன்ற பொருட்களின் தரம், ருசி, நீடித்த உபயோகம் இவற்றை உயர்த்த பண்டகசாலைகள் பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. **11. பிற பணிகள் :** பண்டகசாலையிடுதல் வேலைவாய்ப்புகளை தருவதுடன், நுகர்ச்சி மிக அதிகமான காலங்களில் அவசர போக்குவரத்தை தவிர்க்கிறது. சந்தையிடும் முறையை எளிதாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் வாங்குபவர்களுக்கு சேவைகளையும் செகிறது.
**12. இடர்களை ஏற்றல்:** பொருட்கள் பழுதாவதால் உரிமையாளர்களுக்கு ஏற்படும். இழப்பை பண்டகசாலைப் பொறுப்பாளர் ஈடு செய்கிறார்.

**60. காசோலை கீறலிடுதல் - வகைகள்** காசோலையின் இடதுபக்க மேல் மூலையில் இரு குறுக்குக் கோடுகள் வரைதலையே கீறலிடுதல் என்கிறோம். காசோலை பெறுநருக்கு தொகையை நேரடியாக வழங்க வேண்டாம் என வங்கியருக்கு இடும் உத்தரவே கீறலிடுதலாகும். கீறலிடுதல் வங்கியருக்கு காசோலைத் தொகையை எதாவது ஒரு வங்கியருக்கு மட்டும் தரும்படியோ அல்லது வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கும்படியோ பணிக்கும் உத்தரவாகும். கீறலிடுதலை இரண்டு வகையாக பிரிக்கலாம். 1. பொதுக் கீறலிடுதல் 2. சிறப்பு கீறலிடுதல். **1. பொதுக்கீறலிடுதல் :** அண்டு கம்பெனி அல்லது அதன் குறுக்கம் உள்ளடங்கிய இரண்டு குறுக்குக் கோடுகளுடன் அல்லது வெறும் இரண்டு குறுக்குக் கோடுகளுடன் "மாற்றத்தக்கதல்ல" என்ற வார்த்தையுடனோ அல்லது இவ்வார்த்தை இல்லாமலோ உள்ள காசோலை பொதுக்கீறலிட்ட காசோலை எனப்படுகிறது. **2. சிறப்பு கீறலிடுதல்:** வங்கியரின் பெயர் காசோலையில் குறிக்கப்பட்டிருந்தால் அது சிறப்பு கீறலிடுதலாகும். "ஒரு வங்கியரின் பெயர் காசோலையில் "மாற்றத்தக்கதல்ல"" என்ற வார்த்தைகளுடனோ அல்லது இந்த வார்த்தை இல்லாமலோ குறிப்பிடப்பட்டிருந்தால் அக்காசோலை சிறப்பு கீறலிடப்பட்டதாகக் கருதப்படும். காசோலையில் குறிப்பிடப்பட்ட அந்த வங்கியருக்காக மடட்டுமே சிறப்பாக கீறலிட்டதாக கருதப்படும்". சிறப்பு கீறலிடுதலில் இரண்டு குறுக்குக் கோடுகள் அவசியமில்லை.

**61. நுகர்வோரை வியாபாரிகள் பின்வரும் வழிகளில் ஏமாற்றுகின்றனர்: அ. அதிகவிலைக்கு விற்றல்** பொருள் அல்லது சேவையின் தரம் மற்றும் அளவிற்கு ஏற்றாற்போல் இல்லாது விற்பனையாளர்கள் அதிக விலைக்கு விற்கிறார்கள். **ஆ. பொருள் இடர்பாடு** கேடு விளைவக்கும் மற்றும் தடைசெய்யப்பட்ட மருந்துகள், போதுமான அளவு பாதுகாப்பற்ற மின் சாதனங்கள் சந்தையில் விற்கப்படுகின்றன. இவைகள் எதிர்காலத்தில்
நுகர்வோருக்குக் கேடு மற்றும் ஊறு விளைவிக்கும். எ.கா. போதுமான அளவு பாதுகாப்பற்ற மின் சாதனங்கள் மின் அதிர்ச்சியை உருவாக்கும். **இ. கலப்படம்** பொதுவாக உணவு பொருட்களில் கலப்படம் அதிகமாகக் காணப்படுகிறது. இதுவொரு மன்னிக்க இயலாத குற்றமாகும். நுகர்வோரின் உடல்நிலையை பாதிக்கிறது. எ.கா. 1. 500 கி. நெகலனில் 300 கி. வனஸ்பதியை கலந்து "சுத்தமான நெய்'' எனக்குறிப்பிடுவது. 2. 1 கிலோ சர்க்கரை கட்டுமனத்தில் 970கி சர்க்கரையை நிரப்பி இதன் "நிகர எடை ஒரு கிலோ""எனக்குறிப்பிடுவது. **ஈ. போலிகள்** பிரபலமடைந்த பொருட்களுக்கு போலிகள் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. ஒவ்வொரு அசல் உற்பத்திப் பொருட்களுக்கு போலி உதிரிபாகங்கள் மற்றும் போலித் துணைப்பொருட்கள் சந்தையில் கிடைக்கின்றன. நுகர்வோர் அசலில் இருந்து போலியை வேறுபடுத்த முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறு அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். எ.கா. கைக்கடிகாரங்கள், வாகன உதிரி பாகங்கள், அழகு சாதனப் பொருட்கள் **உ. தரக்குறைவு** கட்டுமானம் செது முத்திரையிடப்பட்ட கொள்கலன்களைத் திறந்தால் அதிலுள்ள பொருட்கள் தரம் குறைந்ததாகவும், கெட்டுப் போனதாகவும் மேலும் அதன் நிகர எடை கொள்கலனில் குறிப்பிட்ட எடையை விடக் குறைவாக இருப்பதையும் காணலாம். எ.கா. பால்பவுடர், பொட்டலங்கள், ஐஸ்கிரீம், நெடீநு, வெண்ணெ மற்றும் பற்பசை போன்றவைகள். **ஊ. செயற்கைப் பற்றாக்குறை** பால் வழங்கும் நிலையங்கள் ஆகியவற்றில் முறையே சரக்கு இல்லை, மற்றும் திரை அரங்கம் நிறைந்துள்ளது எனும் அறிவிப்புப் பலகைகளை நாம் வெளியே காண்கின்றோம். ஆனால் பால் மற்றும் திரையரங்கு நுழைவுச் சீட்டு ஆகியவை வெளியே அதிக விலையில் கிடைக்கின்றன. **எ. பொய்** விளம்பரங்கள் நுகர்வோரை ஏமாற்றும் பொருட்டு பல்வேறு விளம்பரங்களில் தங்கள் பொருட்களைப் பற்றி உற்பத்தியாளர்கள் திரித்தும், தவறாகவும் கூறகின்றார்கள் **ஏ. உத்திரவாதக் காலத்தில் சேவை மறுத்தல்** நீடித்துழைக்கும் பொருட்களான தொலைக்காட்சிப் பெட்டி, சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், கார்கள் ஆகியவற்றிற்குக் கொள்முதல் செத தினத்தில் இருந்து சில ஆண்டுகளுக்கு இலவச சேவை உத்திரவாதம் அளிக்கப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் அற்ப காரணங்களால் இலவச சேவை மறுக்கப்படுகிறது. உத்திரவாதக் காலத்தில் அளிக்கப்பட்ட சேவைகளுக்கும் நுகர்வோர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட்டுச் சுரண்டப்படுகிறது. **ஐ. தகுதியற்ற பொருட்கள்** நுகரத் தகுதியற்ற பொருட்கள் சந்தையில் விற்கப்படுவது மட்டுமின்றி "உடையாப் பொருட்கள்" என்று சான்றளிக்கப்பட்ட பொருட்கள் உபயோகப்படுத்தும் காலத்தில் உடைந்து போகின்றன. **ஒ. மற்றவைகள்** "கசியாது" என்று சான்றளிக்கப்பட்ட பாட்டரிகள் கசிகின்றன. இரயில் அல்லது விமான பயணியின் உறுதி செய்யப்பட்ட முன் பதிவு இருக்கை கடைசி நிமிடப் பயண நேரத்தில் மறுக்கப்படுவதால் நுகர்வோர் உடல் ரீதீரியாக மட்டுமின்றி, மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். வங்கி ஊழியரின் கவனக் குறைவு மற்றும் அலட்சியப் போக்கினால் வாடிக்கையாளரின் கணக்கில் போதுமான அளவு ரொக்க இருப்பு இருந்தும் எவ்விதத் தகுந்த காரணமின்றி அவருடைய காசோலையை மறுத்ல், அடுக்குமாடி வீட்டில் குடியிருப்போர் குறிப்பிட்ட நாளில் வீட்டை அதனுடைய உரிமையாளரிடம் ஒப்படைக்காமல் இருத்தல், காலாவதியான மருந்துப் பொருட்கள் மருந்தகங்களில் விற்றல். அஞ்சல் வழி வாணிகத்தில் பொருட்களை மாற்ற மாதிரி பொருட்கள் அன்றி வேறு பொருட்களை அனுப்புதல். இவ்வாறு இவற்றைப் பற்றி அதிகமான அளவில் அட்டவணைப் படுத்திக் கொண்டே போகலாம்.

**62. வணிகத்தின் உட்பிரிவுகள்:** உற்பத்தி பொருட்களை அல்லது சேவைகளை தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு பரிமாற்றம் செய்யும் பணியில் அமையும் நடவடிக்கைகள் அனைத்தையுமே வணிகம் என்ற சொல்லின் உள்ளடக்கம். மேற்கண்ட பரிமாற்றத்தில் பல தடைகள் குறுக்கிடுகின்றன.உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே தங்கு தடையற்ற வணிக பரிமாற்றம் நிகழ்வதே வணிகத்தின் குறிக்கோளாகும். வியாபாரம், போக்குவரத்து, நிதி, பண்டகம், காப்பீடு, விளம்பரம் முதலானவற்றுள் அவ்வப்பொழுது சில தடைகள் தோன்றக் கூடும். இருப்பினும், இவற்றோடு தொடர்புள்ள சில வணிக நடவடிக்கைகள் தடைகளை நீக்கப் பேருதவியாக இருக்கின்றன.

**1. வியாபாரம்:** மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் மற்றும் வணிக முகவர்களின் உதவியுடன் வியாபாரம் ஆள்சார் தடையை நீக்குகிறது. பொருட்களின் உரிமையும், உடைமையும் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரை சென்று அடைவது கட்டாயமாகும். அப்போது தான் நுகர்வோர் இத்தகு பொருட்களை நுகர முடியும். இந்த பணிகளை வியாபார நிறுவனர்களே சரியாக செது முடிக்க இயலும். உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்த வியாபாரிகள் பொருட்களைப் பெறுகின்றனர். மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லறை வியாபாரிகள் அந்த பொருட்களை பெறுகின்றனர். நுகர்வோர் தத்தம் தேவைகளுக்கேற்ப பொருட்களைச் சில்லறை வியாபாரிகளிடமிருந்து வாங்கிக் கொள்கின்றனர். இவ்வாறு ஆள்சார்தடை நீக்கப்படுகிறது.

**2. போக்குவரத்து:** போக்குவரத்து இடத்தடைகளை நீக்குகிறது. பொருட்களின் தேவை குறைவாக உள்ள இடத்திலும், அதிக பொருட்கள் உற்பத்தி செயப்படலாம். எனவே உபரி பொருட்கள் போக்குவரத்து சாதனங்களின் உதவியோடு தேவை உள்ள இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதன் மூலம் அப்பொருட்களுக்கு நாம் இடப் பயன்பாட்டை உருவாக்குகிறோம். இடபயன்பாட்டு முறையால் உற்பத்தியாளர் உற்பத்தியை அதிகப்படுத்தி தன் வருவாயை பெருக்கிக் கொள்கிறார். இத்தகு உற்பத்திப் பொருட்களின் சரியான விநியோகத்தால் நுகர்வோர் தேவை நிறைவேறுகிறது. சாலை, இரயில், கடல், வான் போன்ற பல்வேறு வகையான போக்குவரத்து சாதனங்கள் வாணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன. அதே சமயம் பொருட்களின் தேவையை பொறுத்து ஒரு உற்பத்தியாளர் எந்த அளவு வேண்டுமானாலும் உற்பத்தி செயவும் இயலும்.

**3. பண்டகக்காப்பகம்** காலத்தடையை பண்டகக்காப்பகம் நீக்கிவிடும். பருத்தி, சணல், உணவு தானியங்கள்,சர்க்கரை முதலான பொருட்களின் உற்பத்தி சில குறிப்பிட்ட பருவகாலங்களில் தான் செய்யப்படுகின்றன. ஆனால், அவற்றின் தேவை ஆண்டு முழுவதும் இருக்கும். ஆண்டு முழுவதும் இப்பொருட்கள் தடையின்றி கிடைக்கப் பண்டகக்காப்பகம் தேவைப்படுகிறது. சில பொருட்கள் சில குறிப்பிட்ட பருவக்காலங்களில் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. கம்பளித் துணிகள் பனிக்காலத்திலும், மழை அங்கி மற்றும் குடைகள் மழைக்காலத்தில் பயன்படுத்தும் பொருட்கள் ஆகும். இத்தகு பொருட்கள் அந்தப் பருவகாலங்கள் வருவதற்கு முன்னதாகவே தேவைக்கு அதிகமாகவே தயாராக இருப்பு வைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையா பணியாகும். இத்தகு நடைமுறைப் பணிகள் பண்டகக் காப்பகத்தின் உதவியோடு தான் நிறைவேற்றப்படுகின்றன.

**4. வங்கிப் பணிகள்** நிதிப் பற்றாக்குறை எப்பொழுதும் உருவாகக் கூடிய ஒன்றுதான். எப்பொழுதும் பொருட்களின் உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடையே மிகுதியாக காலஇடைவெளி ஏற்படுவது இயல்பே. இத்தகு பொருட்கள் நுகர்வோரிடம் விற்ற பிறகே அத்தகு பொருட்களுக்குரிய பணம் கிடைக்கக்கூடும். இக்கால இடைவேளையில் வணிகத்தை தொடர்ந்து நடத்த வணிகர்களுக்கு நிதி தேவைப்படுகிறது. இந்நிதித் தேவைகளை பற்பல வணிக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் பூர்த்தி செது வருகின்றன.

**5. விளம்பரமும் விற்பான்மையும்** நுகர்வோர் சந்தையில் கிடைக்கும் பல்வகைப்பட்ட பொருட்களைப் பற்றிய எல்லாவிபரங்களையும் அறிந்து வைத்திருப்போர் எனக் கூற இயலாது. நுகர்வோரின் வாங்கும் திறன் வளராமல் தடுக்கும் நிலையைப் பெரிதும் வளர்ப்பது அப்பொருட்களைப் பற்றிய செய்திகளை அறிய இயலாதிருப்பதே ஆகும். உற்பத்தியாளரும் பெருமளவு நுகர்வோரை அடைவதையே விரும்புவார். இதற்கு விளம்பரமும், விற்பான்மையும் பெரிதும் உதவி செகின்றன. நுகர்வோர்க்குப் பொருட்கள் தொடர்பான எல்லாச் செதிகளையும், அவற்றின் சிறப்புகளையும், கிடைக்கும் இடங்களையும், பயன்படுத்தும் முறைகளையும் தொலைகாட்சி, வானொலியின் பண்பலை ஒலிபரப்பு, இணையம் போன்ற சாதனங்கள் மூலம் தொடர்ந்து விளம்பரம் செய்து நுகர்வோர்க்கிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்றன.

**6. காப்பீடு** ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் போது தீப்பிடித்தல் மற்றும் திருட்டு போன்றவற்றால் இடர்பாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த இழப்புகளால் வியாபார வளர்ச்சியில் பல தடைகள் ஏற்படக் கூடும். இவ்வகை இடர்பாட்டினை காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீ¬டு செவதன் மூலம் மட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது. இத்தகு காப்பீட்டுத் திட்டங்களால் தேசிய வணிகம் மட்டுமன்று, உலக வணிகமும் பற்பல நன்மைகளைப் பெற்றுத் தம்மைக் காத்துக் கொள்ள இயலும்.

**7. தகவல் தொடர்பு** விற்போரும், வாங்குவோரும் மொத்த வியாபார நிலையிலும், சில்லறை வியாபார நிலையிலும் தத்தம் வணிகச் செதிகளைத் தம்முள் பரிமாறிக் கொள்ள யாதேனும் சில சாதனங்களை எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது. உற்பத்தியாளர் தத்தம் உற்பத்திப் பொருட்களைப் பற்றி நுகர்வோருக்கு அவ்வப்பொழுது தெரிவித்து வர வேண்டியுள்ளது. வாங்குவோர் தாம் விரும்பும் பொருட்களைப் பெற்றுக் கொள்ள விற்போருக்கு உரிய முறையில் தெரிவிக்க வேண்டியுள்ளது. அஞ்சல் நிலையம், தனியார் கூரியர் சர்வீஸ், ∴பேக்ஸ், தொலைபேசி, செல்போன் போன்றவை இத்தகு செய்திப் பரிமாற்றங்களுக்குப் பெரிதும் உதவி வருகின்றன.

**63.நுகர்வோரின் உரிமைகள் ஏதேனும் 5 மட்டும்:** 1. பொருள்களின் விலை, தரம், சுத்தம், ஆக்கத்தன்மை, அளவுத்தன்மை இவற்றைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துக் கொள்ளல். 2. உயிருக்கும், உடமைக்கும் ஊறுவிளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வதை எதிர்த்து பாதுகாப்பு பெறுதல். 3. நியாயமான விலையில் பலதரப்பட்ட பொருட்களைப் பெறுதல். 4. பொருட்களைக் கையாளுதல், பயன்படுத்துதல் குறித்து விவரங்களை அறிதல். 5. நியாயமற்ற மற்றும் ஏமாற்று வர்த்தக முறைகளிலிருந்து பாதுகாப்பும் பெறுதல். 6. நுகர்வோர் தம் கருத்தினைக் கூறும் உரிமையும் மற்றும் நுகர்வோரின் நலன் முறையாக கருத்தில் கொள்ளப்படும் என்று உறுதி பெறும் உரிமை. 7. நேர்மையற்ற வியாபாரிகளின் சுரண்டுதல் மற்றும் நியாயமற்ற வணிக முறைகளை எதிர்த்துக் தீர்வு காணுதல். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜான் எப். கென்னடி கூற்றுப்படி "நுகர்வோரின் அடிப்படை உரிமைகளாவன. அவை பாதுகாப்பு உரிமை - அறிந்து கொள்ளும் உரிமை தேர்ந்தெடுக்கும் உரிமை - கருத்துக் கூறும் மற்றும் கேட்கும் உரிமை ஆகியன.

**64.துறைவாரிப் பண்டகச் சாலைகளின் சிறப்புக் கூறுகள்**

1) ஓரே இடத்தில் பல்பொருள் விற்பனை : துறைவாரிப் பண்டகச் சாலையின் மூலம் நமக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும் ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரே கூரையின்கீழ் மனிதனுக்குத் தேவையான எல்லாவகைப் பொருட்களையும் வாங்கிப் பயன்பெற முடியும். துறைவாரிப் பண்டகச் சாலையில் "குண்டூசி முதல் வாகனம் வரை" அனைத்துப் பொருட்களும் கிடைக்கின்றன. மேலும் ஒரே பொருளில் பலவகைகள் இருப்பதால் நுகர்வோர் அவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கி திருப்தியடையலாம்.

**2) பேரளவு செயல்கள் :** இது ஒரு பேரளவு அமைப்பாகும். இந்த அமைப்பு நகரின் முக்கிய வியாபார இடங்களில் அமைந்திருக்கும். பெரும்பாலும் விலை அதிகமுள்ள பொருட்களே இங்கு விற்கப்படுகின்றன.

**3) வாங்கும் வசதிகள் :** மிகப்பெரிய துறைவாரிப் பண்டகச் சாலைகளில் அஞ்சலகங்கள், தொலைபேசி நிலையங்கள், வாகனம் நிறுத்தும் இடம், சிற்றுண்டிச் சாலை வசதிகள்,படிப்பகங்கள், ஓய்வறைகள் போன்ற அனைத்துப் பொழுதுபோக்கு வசதிகளும் இருக்கின்றன.

**4) துறைகளின் ஒருங்கிணைப்பு :** ஒரே உரிமையின் கீழும், கட்டுப்பாட்டிற்குள்ளும் அனைத்துத் துறைகளும் செயல்படும். ஒவ்வொரு துறையும் தனித்தே இயங்கினாலும் மற்ற துறைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. இதனால் எல்லாத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட முடிகிறது.

**5) சுய விளம்பரம் :** ஒரு துறை மற்றொரு துறைக்கு விளம்பரமாக அமைகிறது. ஒரு குறிப்பிட்டபொருளை வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கடைக்குள் நுழையும் நுகர்வோர் ஒருவர், பல்வேறுதுறைகளைக் கடந்து செல்லும்போது, இத்துறைகளில் உள்ள மற்ற பொருட்களை அவர் முன்னரே வாங்க வேண்டும் என்று எண்ணியிருக்காவிட்டாலும் அவர் மனதில் வாங்கத் தூண்டும் எண்ணத்தை ஏற்படுத்தும் சுய விளம்பரமாக ஒவ்வொரு துறையும் துணை புரிகிறது.

**65.காப்பீட்டின் தத்துவங்ககள் அல்லது கோட்பாடுகள்:** காப்பீட்டு ஒப்பந்தம் ஒரு வணிக ஒப்பந்தமாகும் வணிக ஒப்பந்தத்தில் உள்ள கோட்பாடுகள்அனைத்தும் காப்பீட்டு ஒப்பந்தத்திற்குப் பொருந்துவதுடன் பின்வரும் சிறப்புக் கோட்பாடுகள் காப்பீட்டில் உள்ளன. அவைகளாவன: **1. காப்பீடு பெறுநலன்** காப்பீடு ஒப்பந்தத்திற்குக் காப்பீடு பெருநலனிருத்தல் அவசியம். காப்பீடு பெருநலன் என்பது குறிப்பிட்ட நிதி சார்ந்த அக்கறை இருக்க வேண்டும். ஒருவருக்கு குறிப்பிட்ட சொத்து இருப்பதனால் பயனும், அச்சொத்தின் அழிவால் பாதிப்பும் அடைவாராயின் அவருக்கு அச்சொத்தில் காப்பீடு பெறுநலன் இருப்பதாகப் பொருள். மேலும் காப்பீடு பெறுநலன் சொந்த பந்தத்தால் இருக்கக்கூடிய ஒன்றல்ல. நிதிசார் அக்கறை நிருபிக்கப்பட வேண்டும். கடல்சார் காப்பீட்டில் நட்டம் ஏற்படும் நேரத்தில் காப்பீடு பெருநலன் இருக்க வேண்டும். ஆனால் தீக்காப்பீட்டில் காப்பீடு பெறுநலன் ஒப்பந்தம் ஏற்படும் போதும் நட்டம் எற்படும் போதும் இருக்க வேண்டும்.

**2. மிக்க நம்பிக்கை:** காப்பீடு மிக்க நம்பிக்கை அடிப்படையிலான ஒப்பந்தமாகும். இதில் காப்பீடு பெறுநர் மற்றும் தருநர் இருவரும் அனைத்து கருப்பொருள் உண்மைகளை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்திட வேண்டும். இதில் காப்பீடு பெற விழைபவர் தன்னால் காப்பீடு செய்யவுள்ள இடர் குறித்த அனைத்து விபரங்களும் அறிந்தவர். அவையாவும் காப்பீடு தருநர் அறிந்திருக்க வாய்ப்பில்லை எனவே, காப்பீடு பெறுநர் தருநருக்கு அனைத்து தகவலையும் தெரிவிக்க வேண்டும். காப்பீடு பெறுநரால் அளிக்கப்படும் தவறான தகவலோ, வேண்டுமென்றே மறைக்கபடுவனவோ, மோசடி செய்யும் எண்ணத்தில் தவறான எழுத்துப்பூர்வ ஆதாரங்களோ, இடர்ப்பாட்டைக் காப்பீடு செய்யக் காரணமாக இருக்குமேயானால் காப்பீடு தருநர் இவ்வொப்பந்தத்தால் ஆன அனைத்துப் பொறுப்புகளிலிருந்து விடுபட்டு விடுவார். ஆனால், ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகி விட்டால் மேற்சொன்ன காரணத்தால் காப்பீடு தருநர் தன் பொறுப்பிலிருந்து விடுபட முடியாது. ஆனால் மேற்சொன்ன அம்சங்களைக் காப்பீடு பெறுநர் தெரிந்து வேண்டுமென்றே தவறான தகவல் அளித்துள்ளார் என நிருபித்துவிட்டால் ஒப்பந்தப் பொறுப்பிணைக் காப்பீடு தருநர் மறுத்துவிடலாம். அவ்வாறே காப்பீடு தருநரோ அல்லது முகவரோ காப்பீட்டுப் பெறுநருக்கு தெரிவித்து மிக்க நம்பிக்கைக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**3. ஈட்டுறுதி:** ஒருவருக்கு ஏற்படும் உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். ஈட்டுறுதி கோட்பாடு சொத்துக் காப்பீட்டிற்கு மட்டும் பொருந்தும். இதன்படி, காப்பீடு பெறுநருக்கு நட்டம் ஏற்பட்டால் அந்நட்டம் ஏற்படுவதற்கு முன் அவர் இருந்த நிலையில் வைப்பது காப்பீடு தருநரின் பொறுப்பு. இக்கோட்பாடானது, காப்பீடு பெறுநர் காப்பீட்டின் மூலம் இலாபம் பெற்று விடக்கூடாது என்பதே ஆகும். ஒரு நட்டம் ஏற்படும் போது காப்பீடு தருநர் உண்மை நட்டம் அல்லது காப்பீடு தொகை இவற்றில் எது குறைவோ அதனையே அளிப்பார். எச்சூழலிலும் காப்பீடு பெறுநர் உண்மை நட்டத்திற்குக் கூடுதலாக எதையும் பெற்றுவிட முடியாது.

**4. அண்மைக் காரணம்:** ஓர் இழப்பு ஏற்பட காப்பீடு செய்யப்பட்ட இடர் அண்மைக் காரணமாக இருந்தால் மட்டுமே ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் பொறுப்பாவார். ஓர் இழப்பு பலதரப்பட்ட காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐயப்பாடு எழும்போது மட்டுமே அதற்க்குறிய அண்மைக்காரணம் எது எனக் காண வேண்டியதாகிறது.

**5. பகிர்ந்தளித்தல்:** காப்பீடு பெறுநர் தன் சொத்தின் மீது ஒன்றிக்கு மேற்பட்ட காப்பீடு தருநரிடம் காப்பீடு செய்திருந்தால், காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினைச் சம்பந்தப்பட்ட காப்பீடு தருநர்கள் ஒப்பந்தப்படியான தொகைக்கு ஏற்ப, விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினைப் பகிர்ந்து அளித்தல் வேண்டும். ஏனெனில், அச்செயல் ஈட்டுறுதி கோட்பாட்டை மீறியதாகிவிடும்.

**6. பகர உரிமை:** பகர உரிமையின் அடிப்படை தத்துவம் ஒருவரின் இடரை மற்றொருவர் ஈடு செய்வதாகும். பகர உரிமை என்பது காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட இடரை காப்பீடு தருநர் ஈடுசெய்தவுடன், இடர் தொடர்பான அனைத்து உரிமைகளையும் காப்பீடு தருநருக்கு மாற்றித் தருவதாகும். இத்தத்துவத்தின்படி இடர் ஏற்பட்ட பொருளின் உரிமையாளராகவும் காப்பீடு தருநர் கருதப்படுகிறார். மேலும் இடர் ஏற்படுத்திய மூன்றாம் நபர்மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், இதன் மூலம் இழப்பீடு ஏதேனும் பெற்றால் அது காப்பீடு தருநரையே சாரும்.

**66.வணிக வங்கிகளின் முதன்மை பணிகள்:**

முதன்மை பணிகள் வங்கிப்பணிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை இரண்டு வகைப்படும்.

**1. வைப்புகளை ஏற்றல்:** பொது மக்களிடமிருந்து வங்கிகள் வைப்பை பெறுகின்றன. இந்த வைப்புகளுக்கு வட்டியுண்டு. பணத்திற்கு பாதுகாப்பும் கிடைக்கிறது. பலதரப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கிகள் பல்வேறு வகையான வைப்புகளை ஏற்றுக் கொள்கின்றன. வைப்புகள் நான்கு வகைப்படும்.

**அ. நிலை வைப்பு அல்லது காலவைப்பு கணக்கு :** ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பணம் இட்டு வைப்பில் வைக்கப்பட்டால், அவற்றை நிலை வைப்பு என்கிறோம். காலம் அதிகமாகும் போது வட்டி வீதமும் அதிகமாகிறது. நிலை வைப்பிற்கான பணம் பெற்றபின் வங்கி அதற்கான நிலை வைப்பு ரசீது வழங்குகிறது நிலை வைப்பாளர் இதனை பிணையமாக வைத்து கடன் பெறலாம்.

**ஆ. சேமிப்பு வைப்பு கணக்கு:** இக்கணக்கில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணத்தை செலுத்தலாம். ஆனால் வாரத்தில் ஒரு முறையோ அல்லது இரு முறையோ தான் பணத்தை திரும்ப எடுக்க முடியும். இவ்வகை கட்டுப்பாடுகள் அடிக்கடி பணத்தை திரும்ப எடுக்கும் பழக்கத்தை முறியடிப்பதற்காக உள்ளன. எந்த ஒரு நபரும் சேமிப்பு வைப்பு கணக்கை தொடங்கலாம்.

**இ. நடப்பு வைப்பு கணக்கு:** இதனை வரம்புள்ள கணக்கு என்றும் கூறலாம். இக்கணக்கில் வங்கி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் பணத்தை இட்டு வைக்கவோ, திரும்ப எடுக்கவோ முடியும். இவ்வகை கணக்கில் கேட்கும் போது பணம் தரவேண்டியுள்ளதால், வங்கி வட்டி எதுவும் தருவதில்லை.இவ்வகை கணக்குகள் வியாபாரிகள், நிறுமங்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது.

**ஈ. தொடர்வைப்பு கணக்கு:** இவ்வகை கணக்கில் இட்டு வைப்பாளர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் இட்டு வைக்கிறார். குறிப்பிட்ட காலகெடு முடிந்தபின் அவர் தான் இட்டு வைத்த பணத்துடன், அதன் மீதான வட்டியையும் திரும்ப பெறுகிறார். மற்ற கணக்குகளைவிட இக்கணக்கில் வட்டிவீதம் அதிகமாக உள்ளது. இட்டு வைப்பாளருக்கு காலக்கெடுவிற்கு முன் பணம் தேவைப்பட்டால், அவர் இட்டு வைத்த பணத்தை திரும்ப பெறலாம், அல்லது இந்த தொடர் இட்டு வைப்பின் மீது கடன் பெறலாம்.

**2. கடன் மற்றும் முன்பணம் வழங்குதல் :** தேவைப்படுவோருக்கு வங்கிகள் கடன் மற்றும் முன்பணம் வழங்குகின்றன. இவற்றின் மீது வட்டி வசூலிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கும் வியாபாரத்திற்கும் இவ்வகையில் உதவுவதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்பாடு அடைய செகிறது. இவ்வகை கடன் மற்றும் முன்பணத்தின் வகைகளாவன :

**அ. கடன்கள் :** வங்கிகள் குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால கடன்களை வழங்குகிறது. இக்கடன்கள் பிணையங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. குறுகிய கால கடன்கள் ஓராண்டிற்குள் திருப்பி செலுத்தப்பட்ட வேண்டியவை. மத்திய கால கடன்கள் ஐந்தாண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட்ட வேண்டியவை. நீண்ட கால கடன்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் திருப்பி செலுத்தப்பட வேண்டியவை.

**ஆ. ரொக்கக் கடன்கள் :** இவ்வகை ஏற்பாட்டில் வங்கி தனது வாடிக்கையாளருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரை பணம் கடன் பெற அனுமதிக்கிறது.பயன்படுத்தப்பட்ட கடன் தொகைக்கு மட்டுமே வட்டி சுமத்தப்படுவதேயன்றி, மொத்த கடனுக்கும் வட்டி வசூலிக்கப்படுவதில்லை.

**இ. மேல்வரைப்பற்று :** நடப்பு கணக்கு வைத்திருப்போர், தங்கள் கணக்கிலுள்ள பணத்திற்கு மேல் ஒரு குறிப்பிட்ட அளவு வரை பணத்தை மிகைப்பற்றாக எடுத்துக் கொள்வதற்கான ஒரு உடன்பாடாகும். மிகைப்பற்று தொகைக்கு மட்டுமே வட்டி சுமத்தப்படுகிறது. மிகைப்பற்றானது ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற ஒரு தற்காலிக கடனாகும்.

**ஈ. உண்டியல்களை வாங்குதல் மற்றும் கழிவு செய்தல் :** வங்கிகள் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து உண்டியல்களை கொள்முதல் செய்து, உண்டியல்களின் தொகைகளிலிருந்து கழிவுகளை கழித்தபின் வரும் நிகரத்தொகை வாடிக்கையாளரின் கணக்கில் வரவைக்கிறது. உண்டியல்களை வாடிக்கையாளரின் சார்பாக பெற்று வசூலுக்கு அனுப்புகிறது. உண்டியல்களின் கால நிறைவின் போது வங்கி அவ்வுண்டியல்களின் மீது பணம் பெறுவதற்காக அவற்றை, அவற்றின் ஏற்பாளர்களுக்கு அனுப்புகிறது. உண்டியல் மறுப்பு ஏற்படும் போது வங்கியானது உண்டியல் தொகையுடன் செலவுத் தொகையையும் சேர்த்து வாடிக்கையாளரிடமிருந்து வசூலிக்கிறது.

**67.உலகமயமாக்கலின் நன்மைகள்**

1. தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றங்களும், அதன் அதிகரித்துக் கொண்டே செல்லும் உபயோகமும், தகவல்களின் வியாபார ரீதியான மதிப்பை உயர்த்தியுள்ளன. மின்னஞ்சல் , இணையம் , நடமாடும் தொலைபேசி, வியாபார வேலைகளுக்கான கணினிகள், வீட்டுத் தொலைக்காட்சி மூலம் நுகர்வோர் தகவல்கள், தொலைக்காட்சி மூலம் பொருள் வாங்குதல் ஆகியவை மதிப்பு வாய்ந்த வியாபார தகவல்களை தந்து வருகின்றன. சிறந்த தகவல்தொடர்பு சாதனங்களின் மூலமாக உலகமே இன்று ஒரு சிறிய கிராமம் போல மாறிவிட்டது.

2. போட்டிகளினால் தொழில்நுட்பம், பயிற்சி முறைகள், தொழிலாளர்கள் மேலாண்மையில் பங்கு பெறுதல் ஆகியவற்றில் வளர்ச்சி அதிகரித்து, உலக முத்திரை பெற்ற பொருட்களுடன் உலக சந்தையில் பங்குபெறுவது சாத்தியமாகியுள்ளது.

3. போட்டிவிலைகளில் நல்ல தரமுள்ள பொருட்களை மிகக்குறைந்த அடக்கவிலையில் உற்பத்தி செய்வதற்காக ஒட்டுமொத்த தரமேலாண்மையை பன்பற்றுவது சந்தையில் வற்புறுத்தப்படுகிறது.

4. திட்ட மேலாண்மை , தந்திர மேலாண்மை மற்றும் பிற மேலாண்மை திறமைகளின் முக்கியத்துவத்தை இது அதிகரித்துள்ளது.

5. சந்தையில் தொடர்ந்து இருப்பதே ஒரு சவாலாக ஆகிவிட்டதால், போட்டியை சமாளிப்பதற்கு புதிய பொருள் உற்பத்தியின் முக்கியத்துவத்தை இது அதிகரித்துள்ளது

6. வியாபார சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அயல்நாட்டு நிறுமங்களுடன் உலகளாவிய தந்திர கூட்டாண்மைகள் உருவாகியுள்ளன.

7. மொத்த அடக்கவிலை மற்றும் அயல்நாடுகளிலுள்ள ஆராய்ச்சி வசதிகளை பகிர்ந்து கொள்வதற்காக மற்ற நாடுகளுடன் இணை - வினை செயல்பாடுகளை இது அதிகரித்துள்ளது.

8. உரிம உடன்படிக்கை மூலமாக முத்திரையிடப்பட்ட பொருட்கள் அல்லது பதிவு உரிமை பெற்ற செயல்முறைகள் அல்லது பதிப்பு உரிமை பெற்ற பொருட்கள் ஆகியவற்றை சந்தையிலிடும் உரிமையை இது அதிகரித்துள்ளது.

**68.பண்டகசாலையின் வகைகள்:**

பண்டக காப்பங்களின் **உரிமையாளர்கள் அடிப்படையில்**

1. தனியார் பண்டகசாலை 2. பொது பண்டகசாலை 3. கூட்டுறவு பண்டகசாலை

பண்டக காப்பகங்கள் வழங்கும் **சேவையின் அடிப்படையில்** கீழ்கண்ட வகைகளாகப் பிரிக்கலாம்:

1. பிணைய காப்பு பண்டகசாலை 2. பொதுப்பொருள் பண்டகசாலை 3. சிறப்புப்பொருள் பண்டகசாலை 4. குளிர்பதன பண்டகசாலை 5. திறந்தவெளி அல்லது வயல்வெளி கிடங்கு 6. வீட்டு உபயோகப்பொருள் பண்டகசாலை 7. தானிய தூக்கிகள் 8. முற்ற சேமிப்பு கிடங்கு 9. நிறுவன முறை பண்டகசாலை

உரிமையாளர் அடிப்படையில் பண்டகசாலைகளின் வகைகள்:

**1. தனியார் பண்டகசாலை:** தங்கள் சொந்த பொருட்களை வைத்திருப்பதற்காக தனிநபர்கள் பண்டகசாலைகள் வைத்திருக்கிறார்கள். உதாரணமாக பெரியளவு உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் ஏல விற்பனையாளர் ஆகியோர், தொடர்ந்து சீராக பொருட்களை வழங்குவதற்காக தங்களுடைய சொந்த பண்டகசாலைகளை வைத்திருக்கிறார்கள். எல்லாவிதமான செலவுகளையும் நஷ்டங்களையும் அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். பெருமளவு மற்றும் நிலைத்த தொடர்ந்த விற்பனையை கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே இம்மாதிரியான பண்டகசாலைகள் வைத்திருப்பது சாத்தியப்படுகிறது.

**2. பொது பண்டகசாலை :** சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், பொருள் இருப்பு வைத்திருப்போர் மற்றும் பொதுமக்களுக்கு வைப்பிடுதல் சேவை செவதற்காக தொடங்கப்பட்டுள்ளன. இவ்வகை பண்டகசாலைகளில் வைப்பிட்ட பொருட்களுக்கு வாடகை பெறுவதுடன் பார்வையிடுதல், கட்டுமானம் செய்தல், கப்பலில் ஏற்றுதல் மற்றும் பட்டியல் தயாரித்தல் போன்ற சேவைளுக்கு சேவைக்கட்டணமும் பெறுகின்றன. இவை இருப்புபாதை மற்றும் நெடுஞ்சாலைகள் உள்ள முக்கியமான இடங்களில் அமைக்கப்படுகின்றன. **3. கூட்டுறவு பண்டகசாலை:** இவ்வகை பண்டக சாலைகள் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாதோரின் வசதிக்காக அமைக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் இவ்வித கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி உறுப்பினர்களாகின்றனர். உபயோகப்படுத்தப்படும் இடம், தன்னிலமற்ற மேலாண்மை, உறுப்பினர்களின் பொறுப்புடன் நடக்கும் தன்மை, பண்டகசாலையின் நிதி நிலைமை இவைகளை பொறுத்தே திறமைகள் மாறுபடுகின்றன.

**சேவையின் அடிப்படையில் பண்டகசாலைகளின் வகைகள்:**

**1. பிணைய காப்பு பண்டகசாலை:** இவ்வகை பண்டக சாலைகள் அரசிடம் உரிமம்பெற்று பண்டங்களை பிணையத்தின் அடிப்படையில் காப்பகங்களில் வைத்திருந்து கொடுக்க எற்றுக் கொள்ளப்படுகிறது. இறக்குமதி செயப்பட்ட சரக்குகள் சுங்கவரி கட்டும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்கப்படுகின்றன. சுங்கவரி கட்டிய பிறகுதான் பண்டகசாலையிலிருந்து சரக்குகள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும். இவ்வகை பண்டகசாலைகள் துறைமுகத்தின் அருகில் அமைக்கப்பட்டிருக்கும். அரசாங்க பிணைய காப்பு பண்டகசாலைகளாக இருப்பின் சுங்க அதிகாரிகளின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இப்பண்டகசாலைகள் வந்துவிடும். பொருட்களின் உரிமையாளர்கள் பொருட்களை ஆய்வு செயவும், ஜாடிகளில் அடைத்தல், பெயர் மற்றும் முத்திரை பதித்தல், பொருட்களை ஒன்றுடன் ஒன்று கலக்குதல் ஆகியவற்றை செடீநுயவும் அனுமதி அளிக்கப்படுகிறது. **2. பொது பொருள் பண்டகசாலை:** சிறப்பாக பாதுகாக்கப்பட வேண்டிய பொருட்களைத் தவிர மற்ற பொருட்கள் யாவும் இப்பண்டகசாலையில் இட்டு வைக்கப்படும். எனவே, இப்பண்டக சாலைகளை சுருக்கமாக இளைப்பாறுமிடம் எனவும் கூறலாம். இவ்வகை பண்டகசாலைகளை உற்பத்தியாளர்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் பயன்டுத்திக் கொள்கின்றனர். **3. சிறப்பு பொருள் பண்டகசாலை:** இவ்வகை பண்டகசாலைகள் புகையிலை, பருத்தி, கம்பளி ஆகிய சிறப்பான பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டி அதற்கென்றே பிரத்யேகமாக கட்டப்பட்டு பயன்படுத்தப்படும். **4. குளிர்பதன பண்டகசாலை :** சிலவிதமான பொருட்கள் எதிர்கால நுகர்வுக்காக குளிரூட்டத்தில் வைத்திருக்க

வேண்டியுள்ளது. உ.ம். பழங்கள், மீன், இறைச்சி, முட்டை. **5. திறந்த வெளி கிடங்கு:** இவ்வகை கிடங்குகள் அமெரிக்காவில் அதிக வரவேற்பு பெற்றிருக்கிறது. வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறுவதற்காக இவ்வகை காப்பங்களில் தொழில் வல்லுநர்கள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் பொருள்களை இட்டு வைக்கின்றனர். பொருட்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட அறையில் வைக்கப்பட்டு அதன் உரிமையை பொது பண்டக காப்பாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர் பொருள் ஒப்படைவ செய்த பின் ரசீதை வழங்குகிறார். இந்த ரசீதை பயன்படுத்தி வங்கியில் நிதி உதவி பெற முடியும். **6. வீட்டு உபயோக பொருட்கள் பண்டகசாலை :** இச்சிறிய வைப்பகத்தில் ஒரு சிறிய குடும்பத்தின் தேவைக்கு மிகுதியான பொருட்கள் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகிறது. கிராமப்புறங்களில்விவசாயிகள் தங்களது எதிர்காலத் தேவைக்குப் பாதுகாப்பாக விவசாயப் பொருட்களை வைத்திருக்கின்றனர். இம்மாதிரியான பாதுகாப்புகளை வீட்டு உபயோகப் பொருள் பாதுகாப்பு என்கிறோம். **7. தானிய தூக்கிகள் :** இது ஒரு நவீனமுறை பண்டக பாதுகாப்பாகும். இம்முறை அமெரிக்கா மற்றும் யு.கே நாடுகளில் அதிக வரவேற்பு பெற்றுள்ளது. இம்முறையில் மிக அதிக அளவு தானியங்கள், தானிய தூக்கிகளில் பாதுக்காப்பாக வைக்கப்படுகிறது.

**8. முற்ற சேமிப்பு கிடங்கு :** இரும்பு, மூங்கில் போன்ற சீதோஷ்ண நிலையில் அழுகாமல் இருக்கக்கூடிய பொருட்கள் இவ்வகை சேமிப்புக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. இக்கிடங்குகள் திறந்த வெளியில் சுற்று சுவர் ஏற்படுத்தப்பட்டு கிடங்குகளில் உள்ள பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றன.

**9. நிறுவனமுறை பண்டகசாலை :** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டகசாலைகளை வைத்திருக்கிறது. இந்திய உணவு கழகம், வங்கிகள், இருப்பு பாதைபோக்குவரத்துகள், இன்னும் பல இவ்வகையான பண்டகசாலைகளை தனது அன்றாட வேலைகளை செவ்வனே செய்ய வைத்துள்ளனர். பின்வருபவை நிறுவனமுறை பண்டகசாலைகளாகும்.

**அ. இந்திய உணவு கழகம் பண்டகசாலை:** இந்திய அரசின் கட்டாயக் கொள்கையின்படி உணவு தானியங்கள் விசாயிகளிடமிருந்து குறித்த விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பண்டகசாலையில் வைக்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்குநியாயமான விலைகள் கிடைக்கிறது. இது விவசாயிகளுக்கு எதிர்வரும் பருவத்திற்கு விவசாய பொருட்களை உற்பத்தி செய ஊக்கமளிக்கிறது. குறைந்தபட்ச அளவு சரக்குகளை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருப்பதால் நுகர்வோருக்கு அதிக விலையினால் பாதிப்பு ஏற்படாவண்ணம் காக்கிறது

**ஆ. அரசு பண்டகசாலை :** மத்திய, மாநில அரசின் பிரத்யேக உபயோகத்திற்காக இவ்வகை பண்டகசாலைகள் உருவாகின்றன.

**இ. வங்கி கிடங்குகள் :** வங்கியில் கடன் பெறும்பொருட்டு அடமானம் வைக்கப்பட்ட பொருள்கள் இவ்வகைப்பட்ட கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

**ஈ. இருப்புப்பாதை போக்குவரத்து பண்டக சாலை:** இருப்புப்பாதைகள் வழியாக போக்குவரத்தை மேற்கொண்டு பொருள்களை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்ப ஏதுவாக ரயில்வே பண்டகசாலையில் பொருட்கள், போ சேரவேண்டிய இடத்திற்கு அனுப்பும் வரை பண்டகசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இறக்கி வைக்கப்பட்ட பொருட்கள் அதற்குரிய உரிமையாளர்வந்து எடுத்துச் செல்லும் வரை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகிறது

**69.இறக்குமதி வணிக நடைமுறைகள்**

இறக்குமதி வணிக நடைமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. பின்வருவன இறக்குமதி வணிகத்திற்கான ஒரு பொதுவான நடைமுறையாகும். **1. வியாபார விசாரணை :** இறக்குமதி செய்யும் எண்ணமுள்ளவர், ஏற்றுமதி செய்ய இருப்பவர்களிடம் வியாபார விசாரணை செய்கிறார். பொருள்களின் விலை, தரம், வடிவமைப்பு, அளவு, பணம் செலுத்தும் முறைகள், பொருள் வழங்கல் நிபந்தனைகள் இவற்றைப்பற்றி பொருள் வாங்க எண்ணமுள்ளவரே அல்லது அவரது முகவரோ விசாரணை செகிறார். ஏற்றுமதியாளர் அவ்விசாரணைக்கு பதில் அனுப்புகிறார். இவை ”விலைப்புள்ளி” என்றும் அழைக்கப்படுகின்றன. இறக்குமதி செய்ய முடிவு எடுப்பதற்கு முன் எல்லா விலைப்புள்ளிகளும் ஒப்பிட்டு பார்க்கப்படுகின்றன. **2. இறக்குமதி உரிமம் மற்றும் பங்கு அளவை பெறுதல் :** பொருள்களைஇறக்குமதி செய்வது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தினால் (1947)-ல் கடடுப்படுத்தப்படுவதால், இறக்குமதி செய்ய விரும்புவர் உரிமம் வழங்கும துறையிடமிருந்து உரிமம் பெற வேண்டும். இறக்குமதி உரிமமானது, பொது உரிமமாகவோ அல்லது குறிப்பிட்ட உரிமமாகவோ இருக்கலாம். பொது உரிமம் எந்த தேசத்திலிருந்தும் இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது. ஆனால், குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட உரிமம் சில குறிப்பிட்ட தேசங்களிடமிருந்து மட்டுமே இறக்குமதியை அனுமதிக்கிறது. இறக்குமதி உரிமம் இரு பிரதிகளாக வழங்கப்படுகிறது. முதல் பிரதி இறக்குமதியாளர் சரக்குளை எடுத்துச் செல்லும் போது சுங்கத்துறையினரிடம் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது படிவம் மைய வங்கியிடமிருந்து அந்நிய செலாவணி பெறுவதற்காக பயன்படுத்தப்படுகிறது.

**3. அந்நியச் செலாவணியைப் பெறுதல்:** இறக்குமதியாளர் ஏற்றுமதி செய்யும் நாட்டுக்கு, அந்நாட்டின் செலாவணியிலேயே பணம் தரவேண்டியிருப்பதால், இறக்குமதியாளர் உரிமம் பெற்ற பிறகு, தேவையான அந்நியச் செலவாணியைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. இந்தியாவில் இந்திய மைய வங்கி அந்நியச் செலாவணி பயன்பாட்டை நெறிபடுத்துவதற்கு அதிகாரம் படைத்தது. **4. சரக்குத் தேவைக்கான குறிப்பீடு அல்லது ஆணை பிறப்பித்தல் :** இறக்குமதி உரிமம் மற்றும் தேவையான அளவு அந்நியச் செலாவணி பெற்றபின் இறக்குமதியாளர் சரக்குத் தேவைக்கான குறிப்பீடு அல்லது ஆணையை பிறப்பிக்கிறார். சரக்குத் தேவை குறிப்பீடு என்பது ஒரு இறக்குமதியாளர், ஒரு ஏற்றுமதியாளரிடம் குறிப்பிட்ட சரக்குகளை அனுப்புமாறு பிறப்பிக்கும் ஒரு ஆணையாகும். இதில் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் பற்றிய முழு விபரங்கள், விலை பற்றிய நிபந்தனைகள், கப்பலின் ஏற்றப்படும் விபரங்கள், சரக்குப் பட்டுவாடா, பணம் செலுத்தும் முறை போன்றவை இருக்கும். **5. கடன் கடிதம் பெற ஏற்பாடு செய்தல் :** இறக்குமதியாளரின் மீது ஏற்றுமதியாளர் வரையும் மாற்றுமுறை உண்டியல் தன்னிடம் வரும்போது அதற்கு பணம் தரப்படும் என்று, இறக்குமதியாளருடைய வங்கியின் உறுதிமொழியே கடன் கடிதமாகும்.

இறக்குமதியாளரின் நாணயத்தன்மையை உறுதி செவதற்காகவே இக்கடிதம் பெறப்படுகிறது. **6. கப்பல் ஆவணங்களைப் பெறுதல் :** சரக்கு ஆணையையும் கடன் கடிதத்தையும் பெற்ற பிறகு, ஏற்றுமதியாளர் சரக்குகளை கப்பலில் ஏற்றுகிறார். இதன் பிறகு ஏற்றுமதியாளர், இறக்குமதியாளருக்கு ஒரு ஆலோசனை குறிப்பு சீட்டு அனுப்புவதன் மூலம், சரக்குகள் அனுப்பப்பட்டதை தெரிவிக்கிறார். இந்த ஆலோசனை குறிப்புச் சீட்டு, கப்பல் சேருமிடத் துறைமுகத்திற்கு வந்துசேரும் உத்தேசத் தேதியை இறக்குமதியாளருக்குத் தெரிவிக்கிறது. இதன்பிறகு, ஏற்றுமதியாளர் அனுப்பிய சரக்குகளின் மதிப்பிற்கு ஈடான தொகைக்கு இறக்குமதியாளரின் வங்கி மீது மாற்றுமுறை உண்டியல் தயாரிக்கிறார். இந்த மாற்றுமுறை ஆவணம் தேவையான கப்பல் ஆவணங்களுடன் அனுப்பப்பட்டால், அது "ஆவணங்களுடன் கூடிய உண்டியல்" என்றழைக்கப்படுகிறது. இதில், 1. மாற்றுமுறை உண்டியல் 2. கப்பல் ஆவணங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. கப்பல் ஆவணங்களில் கப்பல் ரசீது, காப்பீடு ஆவணங்கள், உற்பத்தியிட சான்றிதழ், தூதரக பட்டியல் ஆகியவை அடங்கும். இவைகள் இறக்குமதியாளரின் நாட்டில் தனது இணையையோ அல்லது முகவரையோ கொண்டுள்ள ஒரு அந்நியச் செலாவணி வங்கியால் பணம் பெறுவதற்காக இறக்குமதியாளரின் வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடன் கடித ஏற்பாட்டு, முறையில் இறக்குமதியாளரின் வங்கி, சுங்க அதிகாரிகளிடமிருந்து சரக்கை பெறுவதற்காக இறக்குமதியாளருக்கு இவ்வாணங்களை தருகிறது. கடன் கடிதம் இல்லாத நிலையில் இறக்குமதியாளரின் வங்கி இந்த ஆவணங்களை இறக்குமதியாளருக்குத் தருவதில் ஏற்றுமதியாளரின் உத்தரவுப்படி நடந்து கொள்கிறது. இதில் மாற்றுமுறை உண்டியல் "ஏற்பக்குப்பின் ஆவணங்கள்" என்று குறிக்கப்பட்டிருந்தால், இந்த ஆவணங்கள் இறக்குமதியாளர் இந்த உண்டியலுக்கு தனது ஏற்பை தந்த பின்னரே ஆவணங்கள் வழங்கப்படும். வழக்கமாக இந்த உண்டியலின் காலம் 30-லிருந்து 90 நாட்கள் வரை இருக்கும். இந்த மாற்றுமுறை உண்டியல் "பணம் செலுத்தியபின் ஆவணங்கள்"என்று குறிக்கப்பட்டிருந்தால், இறக்குமதியாளர் உண்டியல் தொகையை செலுத்திய பின்பே ஆவணங்கள் அவருக்கு வழங்கப்படும்.

**7. சரக்குகளை எடுத்துச் செல்லுதல்:** சரக்குகளுக்கான உரிமை சான்று ஆவணங்களை பெற்றபின் இறக்குமதியாளர் கப்பலின் வருகைக்காக காத்திருக்கிறார். கப்பல் வந்து சேர்ந்தபின் இறக்குமதியாளர் சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக சுங்க அலுவலங்கத்திற்கு இறக்குக்கூலி, இறக்குமதி வரி, சுங்க வரி மற்றும் இதர துறைமுக வரிகளைச் செலுத்தி பொருட்களை பெற்றுக் கொள்கிறார்.

**70.ஏற்றுமதி வணிக நடைமுறைகள் : 1. விசாரணைகளை பெறுவது :** முதல் கட்டத்தில் ஒரு இறக்குமதியாளரிடமிருந்து சரக்குகளின் விலை, தரம் மற்றும் நிபந்தனைகளை பற்றிய ஒரு வணிக விசாரணையை ஏற்றுமதியாளர் பெறுகிறார். அதன்பின் ஏற்றுமதியாளர் விற்பனைக்கான நிபந்தனைகள், விற்பனை செல்லுநிலைக்காலம், சரக்கு வழங்கு காலம், பணம் செலுத்தும் விதிகள் ஆகியவை உள்ளடங்கிய "விலைப்புள்ளி" அனுப்பி வைக்கிறார். **2. சரக்காணை அல்லது தேவைக்குறிப்பீடு பெறுதல்:** இரண்டாவது கட்டத்தில் ஏற்றுமதியாளர், சரக்காணையை இறக்குமதியாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது தேவைக்குறிப்பீட்டகங்கள் போன்ற சிறப்பு முகமை மூலமாகவோ பெறுகிறார். **3. கடன் கடிதம் பெறுதல்:** உறுதிபடுத்தப்பட்ட சரக்காணை பெற்றபின் ஏற்றுமதியாளர், இறக்குமதியாளரின் நாணயத்தன்மையைப் பற்றி விசாரிக்கிறார். பொதுவாக, ஏற்றுமதியாளர், இறக்குமதியாளரிடம் ஒரு கடன் கடிதம் அனுப்புமாறு கேட்கிறார். கடன் கடிதம் என்பது ஏற்றுமதியாளரால், இறக்குமதியாளர் மீது வரையப்பட்ட மாற்றுமுறை உண்டியல் தன்னிடம் வரும்போது அதற்கு பணம் தரப்படும் என்ற இறக்குமதியாளரின் வங்கியின் உறுதிமொழியே கடன் கடிதமாகும். **4. ஏற்றுமதி உரிமம் அல்லது அளவீடு பெறுதல்:** ஏற்றுமதி வணிகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டம் 1947 மற்றும் அந்நிய வாணிபம் (வளர்ச்சி மற்றும் நெறிமுறை) சட்டம் 1992 இவற்றால் நெறிப்படுத்தப்படுகிறது. கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுள்ள சரக்குகளை ஒருசெல்லத்தக்க ஏற்றுமதி உரிமம் பெறாமல் ஏற்றுமதி செய்ய முடியாது. ஏற்றுமதியாளர், அயல்நாட்டு வணிக பொது இயக்குநருக்கோ, அல்லது மண்டல உரிமை வழங்கும் அதிகாரிக்கோ, குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வதிகாரி தகுதியானவர்களுக்கு உரிமம் வழங்குவார். **5. அந்நியச் செலாவணி ஒழுங்காற்று விதிகள் பின்பற்றப்படுவது:** அந்நியச் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டம் 1947ன் படி ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், சரக்குகளின் முழு மதிப்பிற்கான அந்நியச் செலாவணியை இந்திய மைய வங்கிக்கு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செலுத்திவிடுவதாக உறுதிமொழி தர வேண்டும். **6. கப்பல் ஆணை பெறுதல்:** கப்பல் ஆணை என்பது, அதில் குறிப்பிட்ட அளவு சரக்குகளை பெற்றுக் கொள்ளுமாறு கப்பல் தலைவருக்கு உத்தரவுகள் அடங்கிய ஒரு ஆணையாகும். ஏற்றுமதியாளர் சார்பாக கப்பல் நிறுவனத்திடமிருந்து, கப்பல் முகவர் கப்பல் ஆணை பெறுகிறார். **7. கட்டுமானம், குறியீடு மற்றும் அனுப்புகை ஏற்பாடு செய்தல்:** ஏற்றுமதியாளரின் உத்திரவுகளுக்கு இணங்க கட்டுமானம் மற்றும் குறியீடு செய்யப்படல் வேண்டும், அனுப்புகை முகவர்கள் இவற்றை பூர்த்தி செய்வர். **8. சரக்குப்பட்டியல் பட்டியல் தயாரித்தல்:** அனுப்புகை முகவரிடமிருந்து தகவல் பெற்றபின்பு அல்லது சரக்குகளை கப்பலில் ஏற்றியபின்பு, ஏற்றுமதியாளர் சரக்குப்பட்டியலை தயாரிக்க வேண்டும். ஏற்றுமதியாளர் மற்றும் இறக்குமதியாளருக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி இது தயாரிக்கப்டுகிறது.இதன் பிறகு அயல்நாட்டுத் தூதுவர் இதற்கான சான்றிதழை வழங்குகிறார். **9. சுங்கவரித் தீர்வு பெறுதல்:** ஏற்றுமதியாளர் சுங்கவரி அலுவலகத்திற்கு ஏற்றுமதி விண்ணப்பத்துடன் கப்பல் ரசீதின் மூன்று பிரதிகளையும், ஏற்றுமதி உரிமத்தையும் தரவேண்டும். சுங்க அதிகாரிகள் எல்லா சடங்குமுறைகளையும் சரிபார்த்தபின் ஏற்றுமதி அனுமதிச்சீட்டு வழங்குகிறார். **10. துறைமுகத்தள கட்டணம் செலுத்துதல்:** ஏற்றுமதிவரி செலுத்தியப்பின் சரக்குகளை துறைமுகத் தளத்திற்கு கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்படுகிறது. துறைமுகத்தளம் என்பது கப்பலில் சரக்குகளை ஏற்றுவதற்கான ஒரு வைப்பிடமாகும்.

**71.மொத்த வியாபாரிகளின் நடைமுறைப் பணிகள்: (அ)கொள்முதல் மற்றும் ஒன்று திரட்டுதல்:** 1)பலவகைப்பட்ட பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி, இனவாரியாக ஒன்றுதிரட்டி இருப்பு வைத்து சில்லறை வியாபாரிக்கு விற்பார். 2)குறிப்பிட்ட காலத்தில் மட்டும் விற்கும் பொருட்களை அந்தந்த காலத்தில் வாங்கி வைத்து விற்பனை செய்வார். 3)தேவைகளின் வளர்ச்சிகளில் கவனம் செலுத்தி, புதிய தயாரிப்புகளை வாங்கி வைப்பதும், தேவையற்ற தயாரிப்புகளை வாங்காது விட்டு விடுவதும் மொத்த வியாபாரிகளின் இயல்பான செயல்கள் ஆகும். **(ஆ)இருப்புவைத்தல் அல்லது பண்டகக்காப்பு:** 1)உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடையே ஏற்படும் கால இடைவெளியை மனதிற்கொண்டு, பொருட்கள் கிடைக்கும் பொழுதே வாங்கி இருப்பு வைத்து, சில்லறை வியாபாரிக்கு சிறு சிறு அளவில் வியாபாரம் செய்வார். 2)பொருட்களை அழிவிலிருந்து பாதுகாத்து, சந்தையில் தேவைப்படும் பொழுதெல்லாம் கிடைக்குமாறு செய்வார்.**(இ) போக்குவரத்து வசதி அளித்தல்:** 1)சில்லறை வியாபாரிகளின் கடைகளுக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் வாகனங்கள் மூலம் பொருட்களை அனுப்பி வைப்பார். 2)பொருட்களை மொத்தமாக வாங்கி இருப்பு வைத்து அனுப்புவதன் மூலம் அனுப்புகை கட்டணங்களில் சிக்கனத்தை கடைப்பிடிக்கிறார். **(ஈ)நிதிவசதியை தருதல்:** 1)மொத்த வியாபாரிகள் சந்தையில் அதிகமான நிதிவசதியை உருவாக்குவதன் மூலம் வியாபாரத்துறையில் மிகச் சிறந்த முறையில் பங்கேற்கிறார்கள். 2)சில்லறை வியாபாரிகளுக்குத் தேவைப்படும் பொருட்களைக் கடனாக வழங்கி, வியாபாரத்தைப் பெருக்க வழி வகுப்பதால் உற்பத்தியாளர்களின் நிதிச்சுமை மிகவும் குறைகிறது. **(உ)இடர்பாடுகளை ஏற்றல்:** 1)பொருட்களின் விலைவீழ்ச்சி, கெட்டுப்போதல், பொருட்களின் அழிவு, இருப்பு வைப்பதால் ஏற்படும் பிற இழப்புகள் அனைத்தையும் மொத்த வியாபாரிகள் ஏற்றுக் கொள்கின்றனர். 2)சில்லறை வியாபாரிகளால் ஏற்படும் வாராக்கடன் இழப்பையும் மொத்த வியாபாரிகளே ஏற்றுக் கொள்கின்றனர். **(ஊ)தரப்படுத்துதல்,சிப்பம்கட்டுதல்,கட்டுமம்செய்தல்:** 1)தரம், வகை, வடிவு, கசிவு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிக்கு ஏற்ப உற்பத்திப் பொருட்களை மொத்த வியாபாரிகள் தனித் தனியாகப் பிரித்து வகைப்படுத்தி விடுகின்றனர். 2)பெரும் சிப்பங்களை சிறு சிறு சிப்பங்களாக கட்டுமம் செய்து சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்துவிடுகிறனர். **(எ)சந்தை நிலவரங்களைத் தருதல்:** 1)பயனுள்ள சந்தை நிலவரங்களைக் கண்டறிந்து உற்பத்தியாளர்களுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் அவ்வப்போது கூறி வருவார்கள். 2)நுகர்வோரின் தேவை, விருப்பம் மற்றும் புதிய நாகரீகங்களைப் பற்றி உற்பத்தியாளர்களுக்கு எடுத்துக் கூறுவதால், அதற்கேற்ப பொருட்களைத் தயாரித்து வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள மொத்த வியாபாரிகள் உதவுகின்றனர். **(ஏ) பரவலாக்குதல் மற்றும் விற்பனை செய்தல்:** 1)பல்வேறு இடங்களுக்குப் பரவலாகச் சென்று அடையுமாறு விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகளுக்கு, மொத்த வியாபாரிகள் விநியோகம் செய்கின்றனர். 2)பரவலாக ஆங்காங்கே சிதறி இருக்கும் சில்லறை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் தங்கள் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

**72.நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் அமைப்பு**

**நுகர்வோர் பாதுகாப்பு குழுக்களும் மன்றங்களும்** 1986 நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட சரத்துப்படி நுகர்வோர் குழுக்களும் மற்றும் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் மூன்றடுக்கு தீர்வு மன்றங்களாகக் செயல்படுகின்றன.

**தேசிய அளவிலான மையக் குழு**

மையக் குழு என்றழைக்கப்படும் மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் குழு தேசிய அளவில்செயல்படுகிறது. நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தலே மையக் குழுவின்குறிக்கோள்களாகும். அவையாவன: அ) உயிருக்கும் உடமைக்கும் ஊறு விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வதை எதிர்த்துப் பாதுகாப்புப் பெறுதல். ஆ) நியாயமற்ற வணிக முறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு பொருளின் விலை, தரம், சுத்தம், ஆக்கத்தன்மை, அளவுத்தன்மை இவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை. இ) நியாயமான விலையில் பலதரப்பட்ட பொருட்களைப் பெறும் உரிமை. ஈ) நுகர்வோர் தம் கருத்தினைக் கூறும் உரிமையும், நுகர்வோரின் நலன் முறையாகக் கருத்தில் கொள்ளப்படும் என்றும் உறதிபெறும் உரிமையும். உ) நேர்மையற்ற வியாபாரிகளின் சுரண்டுதல் மற்றும் நியாயமற்ற வணிக முறைகளை எதிர்த்து தீர்வு காணும் உரிமை. ஊ) நுகர்வோர் விழிப்புணர்வு பெறும் உரிமை

**தேசியக் குழுமம்**

இத்தேசிய குழுமம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது (ஒரு தலைவர் மற்றும்நான்கு உறுப்பினர்கள்). இச்சட்டத்தின்கீழ் தேசிய நுகர்வோர் சச்சரவுத் தீர்வுக் குழுமம்அமைக்கப்பட்டுள்ளது. இது போல் நீதி இயந்திரமாகும் தேசிய அளவில் இது உச்ச அமைப்பாகும். மைய அரசால் நியமிக்கப்படும் தலைவர் உச்ச நீதிமன்ற தற்போதைய அல்லது ஓவு பெற்ற நீதிபதியாக இருத்தல் வேண்டும். மற்ற நான்கு உறுப்பினர்களும் திறமை, நாணயம், மற்றும் சமூக மதிப்புப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் நிர்வாகம், பொதுத்துறை, தொழில் துறை, கணிதவியல், சட்டம், வணிகவியல், பொருளியல் போன்ற துறைகளில் போதிய அறிவு மற்றும் அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். இந்நான்கு உறுப்பினர்களில் ஒருவராவது பெண் உறுப்பினராக இருத்தல் வேண்டும். பொருள் அல்லது சேவையின் மதிப்பு மற்றும் கோரப்படும் நட்ட ஈட்டுத் தொகையும் ரூபாய 1 கோடிக்கு மேற்பட்டதாக இருப்பின் இக்குழுமத்திடம் முறையிடலாம். மாநிலக் குழுமத்தின் ஆணையின் மீதான மேல் முறையீடுகளை இக்குழுமம் எற்க முடியும். இது பதவேடுகளை மாநில குழுமத்திடமிருந்து கேட்டுத் தகுந்த ஆணையைப் பிறப்பிக்கும்.

**மாநில அளவில் மாநில நுகர்வோர் குழு**

மைய அரசின் குறிக்கோள்களைப் பின்பற்றி மாநில அரசுகள் மாநில அளவில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களையும் மாநில நுகர்வோர் பிரச்சனைத் தீர்வுக் குழுமங்களையும் நிறுவியுள்ளன. மாநிலக் குழுக்கள் ஆலோசனைக் குழுக்களாகச் செயல்படுகின்றன. மாநில குழுமம் பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் நட்ட ஈட்டுத் தொகை ரூபா 20 இலட்சத்திற்கு மேல் ரூபா 1 கோடி வரையுள்ள புகார் மனுக்களை மாநில குழுமம் ஏற்கும். மாநிலத்திலுள்ள எந்த மாவட்ட மன்றத்தின் ஆணையின் மீதான மேல் முறையீடுகளை ஏற்கும். தேவைப்படும் பதிவேடுகளைக் கோரி தகுந்த ஆணைகளைப் பிறப்பிக்கும்.

மாநிலம் குழு மூன்று உறுப்பினர்களைக் கொண்டது. மாநில அரசால் நியமிக்கப்படும் இதன் தலைவர் உயர்நீதிமன்ற நீதிபதியாகவோ அல்லது ஓவு பெற்ற நீதிபதியாகவோ

**73.தானியங்கி பணம் வழங்கும் கருவியின் பயன்கள் :** 1) இது நாள் முழுவதும் சேவை புரிவதால், வங்கி நடவடிக்கை நேரம் வெகுவாக மிச்சப்படுத்தப்படுகிறது.2.துரிதமான,திறமையான, தவறுகளற்ற சேவை கிடைக்கிறது. 3. வலைப்பின்னல் மூலமாக, அட்டை வைத்திருப்பவர் எந்த இடத்திலிருந்தும் ரொக்கம் மற்றும் பல சேவைகளை பெறலாம். 4. வங்கியின் எந்த கிளைக்கும் பணத்தை சுலபமாக மாற்றம் செய்யலாம். 5. எந்த நேரத்திலும் பணம் எடுக்கலாம் என்பதால்,"எங்கும் கிடைக்கும் வங்கிவசதி" என்றும் கூறலாம்.

**74.அஞ்சல்வழி வாணிகத்தின் சிறப்புக் கூறுகள் 1. வாடிக்கையாளர்களுடன் தொடர்பு** வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் இதில் நேரடித் தொடர்பு இல்லை. நாடு முழுவதும் நுகர்வோர் பரவியிருப்பதினால் அவர்கள் அனைவரும் தமக்குத் தேவையானப் பொருட்களை அஞ்சல் மூலம் ஆணையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம். **2. விளம்பரம்** தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் போன்றவைகளின் மூலம் எல்லா இடங்களுக்கும் அஞ்சல் வழி வாணிக நிறுவனங்கள் பரவலாக விளம்பரம் தருகின்றன. **3. முகவரிப் பட்டியல் தயார் செய்தல்** முதற்பணியாக முகவரிப் பட்டியல் ஒன்றை அஞ்சல்வழி வாணிகம் தயார் செய்கிறது. இதில் வாங்கவிருக்கும் வாடிக்கையாளர்களின் பெயர்கள், முகவரி போன்ற விவரங்கள் அதில் குறிக்கப்பட்டிருக்கும். **4. சரக்கு ஆணைகளைப் பெற்று சரக்கை அனுப்புதல்** சரக்கனுப்பக் கோரும் ஆணைகளைப் பெற்றவுடன், சரக்குகளை முறையாகக் கட்டுமம் செய்யப்பட்டு, பதிவுப் பார்சல் அஞ்சல் வழியோ அல்லது பதிவு புத்தக அஞ்சல் வழியோ வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் பொதுவாக இவ்வகைச் சரக்குகள், சரக்கு, மதிப்பு, செலுத்தத்தக்க அஞ்சல் வழியாக அனுப்பப்படுகிறது. **5. பொருத்தமானப் பொருட்கள்** எல்லாவகைப் பொருள்களும், அஞ்சல் வழி வாணிகத்திற்கேற்றதல்ல. தரப்படுத்தப்பட்டு, வாணிகப் பெயரிடப்பட்ட சரக்குகளே சாலச்சிறந்தவை. சரக்குகள் அதிக இடத்தை அடைத்துக் கொள்வதாகவும், எடை அதிகமாக உள்ளதனவாகவும் இருக்கக்கூடாது. பொதுவாக கைக்கடிகாரங்கள், பேனாக்கள், புத்தகங்கள், மருந்துகள் போன்றவை இவ்வகையான வாணிகத்திற்கு ஏற்றவையாகும்.

**75.கொள்கலனாக்கம் - :** சரக்குகளை போக்குவரத்து செய்வதில், அண்மைக் காலத்தில் மெச்சத்தக்க மாற்றங்களும், முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன. இந்த வியத்தகு வளர்ச்சியை ஒட்டு மொத்தமாக குறிக்கும் சொற்றொடரே கொள்கலனாக்கம் என்பதாகும். **முக்கியத்துவம் :** கொள்கலன்களைப் போக்குவரத்துச் சாதனங்கள் மீது ஏற்றுதல், இறக்குதல், லாரிகளிலிருந்து இரயில் அல்லது கப்பலுக்கு மாற்றுதல் ஆகிய அனைத்துச் செயல்களும் இயந்திரங்கள் மூலமாகவே செய்யப்படுகின்றன. இயந்திரமயமும், தன்னியக்கமும், போக்குவரத்துத் துறையில் பெரும் பங்குகொள்ளத் துவங்கியிருக்கின்றன. கொள்கலனாக்கம் உடலுழைப்பால், செய்யப்படும் செயல்களைப் போக்குவரத்துத் துறையினின்றும் அறவே நீக்கிவிட்டது எனச் சொல்லலாம். அயல் நாட்டு வாணிகத்தினூடே பல்வேறு சட்டங்களில் சரக்குகளை வெவ்வேறு போக்குவரத்துச் சாதனங்கள் மூலமாகக் கொண்டு செல்லவேண்டியதாக இருப்பது தெளிவாகிறது. கொள்கலனாக்கம் இச்சிக்கலான போக்குவரத்தை எளிமையாக்குவதால், அது அயல்நாட்டு வாணிகத்திற்கு ஒரு புகழாக அமைகிறது. வசதி, சிக்கனம், தாமதமின்மை ஆகியவை கொள்கலனாக்கத்தினால் எழும் நன்மைகளாகும். மேலும், அது சரக்குகளைக் கட்டுமம் செய்வது, ஏற்றி இறக்குவது சார்ந்த செலவுகளை வெகுவாகக் குறைக்கிறது. எனவே அது மேன்மேலும் செல்வாக்குப் பெற்றுவருவதில் வியப்பேதுமில்லை.

| 76. இடையீட்டாளர் / தன் பொறுப்பு முகவர் | தரகர் |
|---|---|
| உரிமையாளரின் சார்பாக நியமிக்கப்படும் நபர் | வாங்குவோரையும்விற்போரையும் இணைத்து பேரம் பேசும் நபர் |
| தன் பெயரிலேயே செயல்படுவார் உரிமையாளரின் சார்பாக செயல்படுவார் | விற்பனைத் தொகையை பெற முடியும் விற்பனைத் தொகையை பெற முடியாது |
| ஊதியம்கழிவு எனப்படும் | ஊதியம்தரகு எனப்படும் |
| பொதுப் பணிவழி இடைநிலையர் ஆவார் | சிறப்பு பணிவழி இடைநிலையர்ஆவார் |

| 77. மொத்த வியாபாரி | சில்லரை வியாபாரி |
|---|---|
| உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார் | மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார் |
| அதிக அளவில் பொருட்களை வாங்குவார் | குறைந்த அளவில்பொருட்களை வாங்குவார் |
| ஒரே விதமான பொருட்களை வாங்குவார் | பல விதமான பொருட்களை வாங்குவார் |
| உற்பத்தியாளரிடம் நெருக்கமாகவும் நுகர்வோரை விட்டு விலகியும் இருப்பார் | நுகர்வோரிடம் நெருக்கமாகவும் உற்பத்தியாளரை விட்டு விலகியும் இருப்பார் |
| மிகப் பெரிய நகரங்களில் வியாபாரம் செய்வார் | சிறிய கிராமம் முதல்பெரிய நகரம் வரை வியாபாரம் செய்வார் |

| 78.துறைவாரிப் பண்டக சாலை | மடங்குக் கடை |
|---|---|
| ஒரே கட்டிடத்தில் பல துறைகளுடன் செயல்படுகிறது | பல கிளைகளுடன்பல்வேறு இடங்களில் செயல்படுகிறது |
| நகரங்களின் மையப்பகுதியில் அமைக்கப்படும் | வாடிக்கையாளர் அதிகம் உள்ள இடங்களில் அமைக்கப்படும் |
| பல வகையான பொருட்கள் விற்கப்படும் | ஒரு சில குறிப்பிட்ட பொருட்கள் மட்டும் விற்கப்படும் |
| அதிக முதல் தேவைப்படும் | குறைந்த முதல் தேவைப்படும் |
| வாராக்கடன் ஏற்படும் | வாராக் கடன் ஏற்படாது |

| 79. வாடகைக்கொள்முதல்முறை | தவணை முறை விற்பனை |
|---|---|
| இது ஒப்பந்த விற்பனை அல்ல | இது ஒப்பந்த விற்பனை ஆகும் |
| பொருளை வாங்கியவர் விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது | பொருளை வாங்கியவர் விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியும் |
| தவணைத்தொகை செலுத்த தவறினால் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் | தவணைத்தொகை செலுத்த தவறினால் பொருட்கள் பறிமுதல் செய்ய முடியாது. |
| வாராக்கடன் ஏற்படாது | வாராக்கடன் ஏற்படும் |

| 80. உள்நாட்டு வணிகம் | அயல்நாட்டு வணிகம் |
|---|---|
| ஒரு நாட்டுக்கு உள்ளேயே நடைபெறும் வணிகம் | பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகம் |
| பொருள்மற்றும் சேவைப்பறிமாற்றம் ஒரு நாட்டுக்கு உள்ளேயே நடைபெறும் | பொருள்மற்றும் சேவைப்பறிமாற்றம் பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் |
| பல்வேறு நாட்டின் பணப்பறிமாற்றம் இல்லை | பல்வேறு நாட்டின் பணப்பறிமாற்றம் உண்டு |
| போக்குவரத்து இடர் குறைவு | போக்குவரத்து இடர் அதிகம் |
| உள்நாட்டுச் சட்டங்கள் பின்பற்றப்படும் | பல நாட்டுச் சட்டங்கள் பின்பற்றப்படும் |

| 81. பொதுச் சரக்கேற்றி | தனிச் சரக்கேற்றி |
|---|---|
| பொருட்கள் ஏற்றிச் செல்வதை வழக்கமான தொழிலாகச் செய்வார் | சில வேலைகளில்மட்டும் பொருட்களை ஏற்றிச் செல்வார் |
| அனைத்து நபர்களின் பொருட்களையும் ஏற்றிச் செல்வார் | குறிப்பிட்ட நபர்களின் பொருட்களை மட்டும் ஏற்றிச் செல்வார் |
| தனிச் சட்டம் உண்டு | தனிச் சட்டம் இல்லை |
| வாடகைக்காக பொருட்களை ஏற்றிச் செல்கிறார் | வாடகைக்காகவோ அல்லது இலவசமாகவோ ஏற்றிச் செல்கிறார் |
| காப்பீடு தருநராக செயல்படுகிறார் | காப்பீடு தருநராக செயல்படுவது இல்லை |

| 82. பண்டக பற்றுமுறிவு | பத்திரம் பண்டக ரசீது |
|---|---|
| சரக்கை பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி | சரக்கை பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சி மட்டுமல்லாது சரக்கை திரும்ப பெறும்அதிகாரத்தை தரும் ஆவணமாகும் |
| உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமல்ல | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமாகும் |
| வங்கிகளில் மாற்றி நிதியுதவி பெற முடியாது | வங்கிகளில் மாற்றி நிதியுதவி பெற முடியும் |
| இதை பிணையமாக வைக்க முடியாது | இதை பிணையமாக வைக்க முடியும் |
| உரிமை மாற்றம் செய்ய அதிகாரக் கடிதம்வேண்டும் | உரிமை மாற்றம் செய்ய அதிகாரக் கடிதம் தேவையில்லை |

| 83. காப்பீடு | காப்பீட்டுறுதி |
|---|---|
| இடர் நிகழுமா நிகழாதா என்ற உறுதியற்ற நிலை | இடர் நிகழும் என்பது உறுதி ஆனால் எப்பொழுது நிகழும் என்பது உறுதியற்றது |
| குறுகிய கால ஒப்பந்தம் | நீண்ட கால ஒப்பந்தம் |
| சொத்துக்களை பணத்தால்மதிப்பிட முடியும் | மனித வாழ்வை பணத்தால்மதிப்பிட முடியாது |
| இது ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தம் ஆகும் | இது ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தம் அல்ல |
| இடரை ஈடுசெய்து விட்டு பொருட்களின் உரிமையை பெற்றுக்கொள்வர் | இது இதற்கு பொருந்தாது (அ) இடரை ஈடு செய்ய முடியாது |